REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 19 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 43 | Saturday 19, February, 2022 | 16பக்கங்கள் | 30/-

## ரயில் பயணச்சீட்டுக்கள் ஒன்லைனில் விநியோகம்

**நேற்று முதல் ஆரம்பித்து வைப்பு**



பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் நேற்று முதல் ஒன்லைனில் ரயில் பயணச்சீட்டுகளை வழங்க இலங்கை ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகள் இணையத்தில் பயணச்சீட்டை

06

**தமிழில் பேச முடியாமைக்கு வருத்தம் தெரிவித்த அமைச்சர்**

# அரசியல் பொறிமுறை தவறே மொழிப் பிரச்சினைக்கு காரணம்

**இதனை நிவர்த்திக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்**

*யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்*

தமிழ் மொழியில் உங்கள் முன் என்னால் பேச முடியாதமைக்காக நான் வெட்கப்படுகிறேன். அதில் என்னுடைய பிழையில்லை. அரசியல் பொறிமுறையிலுள்ள பிழை. இதனை நாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுக்கும் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்திலேயே 05 பிராந்திய பத்திரிகைகள் உள்ளன. அதனால் இங்கே பல பிராந்திய ஊடகவியலாளர்களும் உள்ளதாக அறிகிறேன்.

ஊடகவியலாளர்களின் கல்வித் தகைமைகளை மேம்படுத்தும் வகையில், பட்டயக்கல்வியை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். அதன்போது பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

06

**யாழ். ஊடகவியலாளர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பில் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு**



## நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபைக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

**மின்னுற்பத்தி தொடர்பான விபரங்களை கேட்டறிந்தார்**



இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (18) திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

நீர், சூரியசக்தி, காற்று போன்ற மீள் புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்களைக் கொண்டு மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பில், கொழும்பு 07இல் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகாரசபையின் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துத் தகவல் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே, ஜனாதிபதி இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

"சுபீட்சத்தின் நோக்கு"

06





யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும, யாழ். மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் கிளை அலுவலகத்தை நேற்று திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம். (படங்கள்: யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்)

## ஐ.நாவில் எத்தகைய அழுத்தம் வந்தாலும் அதை தகர்க்க தயார்

**வெளிவிவகார அமைச்சர் – G.L. பீரிஸ் சபதம்**



ஜெனிவாவில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து

06

**காய்ச்சல், தலைவலி, உடல்வலி**

## கொவிட், டெங்கு குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

**Dr. தீபால் பெரேரா எச்சரிக்கை**




இலங்கையில் கொவிட் மற்றும் டெங்கு நோய்களின் அறிகுறிகள் ஒரே மாதிரியானதாக பதிவாகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இரு நோயாளர்களின்

06

## நாட்டில் ஒமிக்ரோன் பரவுகின்ற வேகம் மீண்டும் அதிகரிப்பு



ஒமிக்ரோன் தொற்றாளர்களிடமிருந்து வைரஸ் பரவும் வேகம் அதிகரித்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கொரோனா

06

**மனித உரிமைகள் பற்றியும் பேச்சு நடத்த**

## இலங்கை வருகிறார் அமெரிக்க உயரதிகாரி



மனித உரிமைகள், வர்த்தகம் மற்றும் முதலீடு சம்பந்தமாக பிரதானமாக கவனம் செலுத்தப்படும் பேச்சுவார்த்தைக்காக அமெரிக்காவின் உயர் அதிகாரி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு (Donald Lu)

06


## எரிபொருள் விலையை அதிகரிக்காவிட்டால் பெரும் நெருக்கடி நிலை

*லோரன்ஸ் செல்வநாயகம்*

எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியமைச்சை கோரியுள்ள நிலையில் இம்முறை எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமானால் அது இலங்கையின் வரலாற்றில் அதிக எரிபொருள் விலையாகக் காணப்படும்

06

## SLBC யில் பியானோ கருவிகள் 03 மாயம்!



**ஹட்சன் முறையீடு; CID விசாரணை**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கென இறக்குமதி செய்யப்பட்ட பெறுமதிமிக்க மூன்று புராதன பியானோ இசைக் கருவிகள் காணாமல் போயுள்ளமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு

06


**ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவம்**

## குற்றச்சாட்டுகளிலிருந்து பூஜித்த - ஹேமசிறி விடுதலை

**கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*





உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு

06

**இலங்கையில் அத்துமீறி மீன்பிடித்து கைதான**


## 47 மீனவர்களும் நேற்று இந்தியாவுக்கு அனுப்பிவைப்பு



இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த 47 இந்திய மீனவர்கள் நேற்று காலை சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப் பட்டினம் பகுதியில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் மீன்பிடிக்க சென்ற 56 மீனவர்களை

06



**நீலக சந்தருவனின் மரணம்**

**பட்டாசு கொளுத்தி பிரதேச மக்கள் கொண்டாட்டம்**



**சமுதித்த வீடு தாக்குதல் சம்பவம்**

**கட்சித் தலைவர் ஒருவரிடமும் பொலிஸார் விசாரணை**



**பூரண தடுப்பூசி பெற்றதை உறுதிப்படுத்த புதிய முறை**

**மொபைல் போனில் புதிய APP அறிமுகம்**



இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் சந்தித்து கலந்துரையாடினார். பத்தரமுல்லையிலுள்ள இசுறுபாய, கல்வி அமைச்சு அலுவலகத்தில் இந்த சந்திப்பு நேற்று (18) நடைபெற்றது.

**பெப். 21ல் இறுதி வடிவம் பெறுகிறது**

## மலையக மக்களின் அரசியல் ஆவணம்




தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையின் பேரில், கண்டி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பி. முத்துலிங்கம் மற்றும் சமூக செயற்பாட்டாளர் கௌதமன் பாலசந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவண வரைபு, பெப்ரவரி 21ம் திகதி கொழும்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி வடிவம் பெறும். இந்த

06

## நாளாந்தம் இரண்டுமுறை மின்வெட்டு அமுலாகிறது

**நேற்று முதல் நடைமுறை**




எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் நாடுதழுவிய ரீதியில் இரண்டு முறைகளில் நான்கு கட்டங்களாக மின்விநியோகத்தை துண்டிக்க இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

பிற்பகல் 02.30 மணிமுதல் மாலை 06.30 வரையான காலப்பகுதியில் 1 மணித்தியாலமும், மாலை 06.30

06

**விக்கல் வீராச்சாமி**



கீரியும் பாம்புமாய் இருந்த டக்லஸ் ஐயாவும் அங்கஜன் தம்பியும் ஒண்டா ஒரே மேடையில இருக்கிறத பாக்க சந்தோஷமா இருக்கு....

அவங்க என்னவோ ஒண்டாத்தான் இருக்கிறாங்க, தங்களுக்குத் தேவையானவைதான் இவைய பிரிச்சு வச்சு தங்கட காரியங்களை சாதிக்கினம்...!!

# எழுச்சி பெற்ற சீனாவினால் இன்று முழு ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ





நாடுகளுக்கிடையிலான நட்புறவு மற்றும் தன்னம்பிக்கையுடன் எழுச்சி பெற்ற சீனாவினால் இன்று முழு ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சீனஇலங்கை இராஜதந்திர உறவுகளின் 65வது ஆண்டு நிறைவையும், இறப்பர் -அரிசி ஒப்பந்தத்தின் 70வது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு நேற்று முன்தினம் (17) பிற்பகல் தாமரை தடாக அரங்கில் நடைபெற்ற நிகழ்வின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சீன-இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65வது ஆண்டு நினைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு நூல், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தலைவர் வீரசுமண வீரசிங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்துரையாற்றி அவர்,..

நான் எனது உரையை ஆரம்பிப்பதற்கு முன்னர், அனைத்து அன்பான வார்த்தைகள் மற்றும் அந்த வார்த்தைகளின் பின்னணியிலுள்ள செயல்பாடுகளுக்கு சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது மக்களிடையே நாம் பகிர்ந்து கொள்ளும் ஆழமான வேரூன்றிய நட்புறவால் நமது நாடுகளுக்கிடையேயான வலுவான பிணைப்புகள் மேலும் வலுப்பெறும் என்று நான் நம்புகிறேன்.

சீனா நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நாடு. மேலும் இது ஒரு பெரிய வரலாறு. அந்த மாபெரும் வரலாற்றுக்கு கொன்ஃபியுசியஸின் தத்துவம் உதவியிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் 2000 வருடங்களுக்கு முன்னிருந்தே காணப்படுவதாக வரலாறு கூறுகிறது. பௌத்தம், சர்வதேச வர்த்தகம் மற்றும் கலாசார உறவுகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வளர்ந்துள்ளது.

இறப்பர் - அரிசி ஒப்பந்தம் (1952) நட்பின் மற்றொரு மைல்கல் என்று கூறலாம். உண்மையில் 1956 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போதே நட்பிற்கு சிறந்த அடித்தளம் இடப்பட்டது.

இன்று உலகின் மிகப்பெரிய சந்தையாக சீனா உள்ளது. சீனா ஏற்கனவே உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக மாறிவிட்டது. சீனாவினால் ஒட்டுமொத்த ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது. சீனா தன்னம்பிக்கையுடன் எழுச்சி பெற்றது. அதேபோன்று நாடுகளுக்கு இடையிலான நட்புறவுடன். சீனா நமது வரலாற்று நட்பு நாடு. அதை நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

சீனா ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் இலங்கையுடன் நட்புறவுடன் இருந்து வருகிறது. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை தொடர்ந்து வலுப்படுத்துவது எமது எதிர்பார்ப்பும் பொறுப்புமாகும் என பிரதமர் தெரிவித்தார்.




கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ பூமி நீளா பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு கோவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமக மஹோற்சவ தேர்த்திருவிழா வியாழக்கிழமை காலை நடைபெற்றது. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேரில் ஆரோகனித்து நகர் வலம் செல்வதை படத்தில் காணலாம். (படங்கள்: கொழும்பு வடக்கு நிருபர்)



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட இணைப்புச் செயலாளர் கலாநிதி விமல் கிகனகே நேற்று (18) அலரிமாளிகையில் தனது வேலைகளை பொறுப்பேற்றபோது சர்வ மதத் தலைவர்கள் ஆஷிர்வதித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்திய போது எடுக்கப்பட்ட படம்.

## இலங்கை விமானப்படையினரால் முல்லேரியா வைத்தியசாலையின் வார்ட் இல 03 புனர்நிமாணம்







முல்லேரியா தேசிய மனநல வைத்தியசாலையின் வார்ட் இல 03 இலங்கை விமானப்படையினால் புனர்நிர்மாணம் செய்து கையளிக்கப்பட்டது. கொழும்பு விமானப்படை தளத்தினால் இந்த வைத்திசாலைக்கான வைத்திய உபகாரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இந்த வேலைத்திட்டம் விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சார்மினி பத்திரனவின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு விமானப்படை தளத்தின் கட்டளை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் டில்ஷான் வாசகேவின் மேற்பார்வையின் கீழ் இடம் பெற்றன.

## சமூக செயற்பாட்டாளர், நடிகை வசந்தகுமாரி கந்தசாமிக்கு விருது



நாட்டில் மக்களுக்காக சிறந்த சேவைகளை மேற்கொண்டுள்ள சமூக செயற்பாட்டாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அகில இலங்கை கலாசார ஒத்துழைப்பு பேரவையினால் அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ் அறிவிப்பாளர் மற்றும் நடிகையான வசந்தகுமாரி கந்தசாமிக்கு தேசிய சமூக சேவை அபிமானி கலாகீர்த்தி விருது வழங்கப்பட்டுள்ளது. (ஸ)

## கல்முனை பிரதேசத்தில் சுகாதார துறைக்கு பங்களித்தவர்களுக்கு கௌரவம்






சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச். சனுஸ் காரியப்பரின் தலைமையில் (16) மாலை நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினதும் தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சேவைகள் பணிமனையின் பணிப்பாளருமான வைத்தியர் ஜி. சுகுணன், கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.ரிபாஸ் ஆகியோர் கல்முனைப் பிரதேசத்தின் சுகாதாரத் துறையின் அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்புகளை செய்யதமைக்காக பாராட்டி நினைவுச் சின்னமும் பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 19 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
18முதல் 24 வரை
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் மாசி 7
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: மரண யோகம்
திதி: திரிதியை



**இராசி பலன்கள்**
மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - சுகம்
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - செலவு
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - போட்டி
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# 05 சட்டமூலங்களுக்கு சபாநாயகர் சான்றுறுதி



பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 05 சட்டமூலங்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன (17) கையெழுத்திட்டு சான்றுரைப்படுத்தினார்.

அதற்கமைய, கடந்த 09 மற்றும் 10 ஆகிய இரு தினங்களிலும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றை இவ்வாறு சபாநாயகர் சான்றுறுதிப்படுத்தினார்.

06

# ஒமிக்ரோன் தொற்று 12 வீதமும் மரணங்கள் 17 வீதமும் அதிகரிப்பு

வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் பணிப்பாளர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை தற்போது 12 வீதமாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அன்றாடம் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், அந்த எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்று கரணமாக மரணிப்போரின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களில் 60 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக் கொள்வதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசிகளை உறுதிப்படுத்த புதிய செயலி



பூரண தடுப்பூசியை செலுத்திக்கொண்டமையை உறுதி செய்வதற்கு கையடக்கத் தொலைபேசி செயலி (APP) ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே (17) அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பொது இடங்களுக்கு செல்லும் போது, பூரண தடுப்பூசி செலுத்திக்கொண்டமை எதிர்வரும் ஏப்ரல் 30ம் திகதிக்கு பின்னர் கட்டாயமாக்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்த நிலையில், பூரண தடுப்பூசி செலுத்திக்கொண்டமையை கண்டறிவதற்கான செயலி ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சமூக அக்கறையும் தொலை தூர பார்வையும் ஊடகங்களுக்கு அவசியம்

**போரில் கவனம் செலுத்திய ஊடகங்கள்**
**போரில் வதைபட்டவர்களின் வாழ்வியலிலும்**
**அக்கறை செலுத்தியிருக்க வேண்டும்**



போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள் போரினால் வதைபட்ட மக்களின் வாழ்வியல் பற்றியும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆரம்பத்திலிருந்து தான் வலியுறுத்தப்பட்டு வந்த13 ஆம் திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தி வந்தால் பாரிய அழிவுகளை தடுத்திருக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் வெளியீட்டுப் பணியகத்தின் கிளை அலுவலகம் யாழ். மாவட்ட செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர்களுடான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். வெகுஜன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும உட்பட அதிதிகள் பலரும் கலந்து கொண்ட நிகழ்வில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,


யாழ். மாவட்ட மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தகவல் வெளியீட்டு பணியகத்தை ஆரம்பித்து வைத்தமைக்காக வெகுஜன ஊடகத் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இனங்களுக்கிடையிலான நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலும் அர்த்தபூர்வமான செயற்பாடுகளை

06

## ஐ.தே.க. பிரதேசசபை உறுப்பினர்கள் 7பேர் பதவி நீக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்



காலி மாவட்டத்தில் 5 பிரதேச சபைகளை சேர்ந்த 7 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கான குழு மூலம் குற்றவாளிகளாக தீர்மானிக்கப்பட்டுள்ள 7 உறுப்பினர்களே இவ்வாறு பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் காலி மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் எச்.ஆர். விஜேகுமாரவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க காலி மாவட்டத்தில் இமதுவ பிரதேச சபை உறுப்பினர்கள் இருவர்,

06

# நெருக்கடியில் உள்ள நாட்டை மீட்க ஊடகங்களாலும் முடியும்

## அங்கஜன் எம்.பி நம்பிக்கை



சாவகச்சேரி விசேட நிருபர்

பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வரும் நாட்டினை நெருக்கடியில் இருந்து மீட்க ஊடகங்களால் முடியும் என பாராளுமன்ற உறுப்பினரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்; தற்போது நாடு பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. அதில் பொருளாதார பிரச்சினை முக்கியமானதொரு பிரச்சினையாக உள்ளது. ஊடகங்கள் இங்குள்ள பிரச்சினைகளை மட்டும் வெளிகொண்டுவராமல் இங்கு முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி நலத் திட்டங்கள் தொடர்பிலும் தகவல்களை வெளிக்கொண்டு வர வேண்டும். அதைப் பார்வையிடும் வெளிநாட்டவர்கள் இங்கு வருகை தந்து முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளை குறைக்க வாய்ப்புகள் உள்ளன என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

அரசாங்க வெளியீட்டுப் பணியகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.இது இங்குள்ள மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அரச தகவல்களை பெறுவதற்குரிய சிறந்த வாய்ப்பு. அரச வெளியீட்டு

06

## கொழும்பில் நாளை கலைஞர் ஸ்ரீசங்கரின் 42வது நினைவு நிகழ்வு



கலைஞர் ஸ்ரீசங்கரின் 42வது நினைவாக நடத்தப்படும் கலைஞர் ஸ்ரீசங்கரின் நினைவு நிகழ்வு நாளை (20) மாலை 5 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டையில் அமைந்துள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 41 வருடங்களாக கலைஞர் ஸ்ரீசங்கரின் நினைவாக நிகழ்வுகளை நடத்தி வருகின்ற கலைஞர் ஸ்ரீசங்கர் நற்பணி மன்றத்தின் தலைவர் சண்முகராஜா இம்முறையும் இவ்விழாவை நடத்தவுள்ளார்.

பழம்பெரும் கலைஞர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில், இலங்கையின் பிரபல பாடகர்களான நவகம்புர கணேஷ், முரளி, கணேஷ், கலை ஸ்ரீ ஆகியோரின் பாடல்களும் எஸ். சுதர்ஷிக்கா, எஸ். விஸ்மித்தா, எஸ். கவினியா, வி. ஜிருக்ஷன், வி. நிருஷிக்கா ஆகியோரின் நடன நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன. பிரபல கலைஞர் தேவர் முனிவரின் வரவேற்புரையும் இடம்பெறும். இலங்கையில் மாபெரும் கலாவிபூஷண விருது வழங்கும் விழாவை நடத்திய சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஷ் இதில் விசேட அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

இங்கு பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரத்தினம், எழுத்தாளரும் கலைஞருமான ஏ. எஸ். எம். நவாஸ் ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்தப்படும். அறிவிப்பாளர் உவைஸ் ஷரீப்பும் இதில் கலந்துகொள்ளவுள்ளார். தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவாணவில் ஊடக அனுசரணையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

சமுதித்த வீடு தாக்குதல் சம்பவம்:

## கட்சித் தலைவர் ஒருவரிடமும் பொலிஸார் விசாரணை



ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் பிலியந்தல வீட்டின் மீது நடத்தப்பட்ட கல் மற்றும் மலக்கழிவு தாக்குதல் சம்பந்தமாக வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக "எமது மக்கள் சக்தி" கட்சியின் தலைவர் சமந்த பெரேராவும் அழைக்கப்பட்டுள்ளதாக பிலியந்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர். சமுதித்தவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், சமுதித்த, தனது வலைதளத்தில் சமந்த பெரேராவுடன் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி இருந்தார்.

06

உயிரியல் பாட வினாத்தாளில் குறைபாடு:

## A/L பரீட்சையில் தமிழ் மொழி மாணவருக்கு அநீதி

### பரிகாரம் காண இம்ரான்MP கோரிக்கை



தற்போது நடைபெற்று வருகின்ற க.பொ.த (உயர்தர) பரீட்சையில் உயிரியல் பாட வினாத்தாளில் தமிழ்மொழி மூல மாணவருக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் பரீட்சைத் திணைக்களம் இதற்கான பரிகாரங்களைக் காண வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"உயிரியல் பாட முதலாம் பகுதி வினாத்தாளின் தமிழ் மொழிபெயர்ப்பில் பாரிய குறைபாடுகள் இருந்ததால் மாணவர்களால் சரியான விடையெழுத முடியாத நிலையேற்பட்டதாக முன்னாள் பிரதம பரீட்சகர் ஒருவரை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயர்தரப் பரீட்சையைப் பொருத்தவரை அது மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற பரீட்சையாகும். எனவே, இப்பரீட்சை வினாத்தாள்கள் மயக்க நிலையிலன்றி தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களால் வினாவுக்கேற்ற விடைகளை எழுத முடியும். அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்வி

06

டொக்டர் சாபியின் ரிட் மனு

## மனுதாரர் தரப்பு கோரிக்கையை பரசீலிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை

### சட்டமா அதிபர் ஆட்சேபனை

டொக்டர் சாபி சிஹாப்தீனுக்கு எதிராக குருணாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தகமுவ ஆரம்பகட்ட ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டதற்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என சட்ட மாஅதிபர் சார்பில் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆட்சேபனை முன்வைத்தார்.

கருக்கலைப்பு சத்திரசிகிச்சை செய்த குற்றச்சாட்டில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட டொக்டர் சாபி சிஹாப்தீனின் மனு மீதான விசாரணையின் போது சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன இதனைத் தெரிவித்தார்.

குருணாகல் ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் சந்தன கெந்தகமுவ ஆரம்ப ஒழுக்காற்று விசாரணை மேற்கொண்டதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் வாதத்தை தொடர்ந்து அவர் இதனை அறிவித்தார்.

டொக்டர் சாபி சிஹாப்தீன் தனது நிலுவை சம்பளத்தை வழங்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்த ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான மேலதிக

06

நீலக சந்தருவனின் மரணம்;

## பட்டாசு கொளுத்தி பிரதேச மக்கள் கொண்டாட்டம்



ஹொரணை பிரதேசத்தில், தனது குழந்தையை கடத்திச் சென்ற பாதாள உலகக்குழு உறுப்பினர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சம்பவத்தால் பிரதேசவாசிகள் பட்டாசு கொளுத்தி அதனை கொண்டாடியுள்ளனர்.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நீலக சந்தருவன் எனும் பாதாள உலகக்குழு உறுப்பினர் நேற்றுமுன்தினம் ஹொரணை, பலபிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அங்குருவதொட்ட, பலபிட்டிய, பிடிகொல சந்தி பகுதியில் மாடி வீட்டில் கடத்திச் செல்லப்பட்ட குழந்தை உள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வீட்டைச் சுற்றி வளைத்தபோது ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நீலக சந்தருவன் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் அங்கு சந்தேகநபரின் ஏழு வயது குழந்தை இருக்கவில்லை.

பொலிஸார் நடத்திய விசாரணையில், குழந்தையை பார்த்துக் கொள்ளுமாறு நண்பரிடம் கூறிவிட்டு நீலக நேற்றுமுன்தினம் தலைமறைவாகியது தெரியவந்தது. அதன்பின்னர் குழந்தை ஹொரண பொலிஸ் தலைமை காரியாலயகத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.

போதைப்பொருளுக்கு அடிமையாகிய நீலக மீது ஏற்கனவே கொலை, பாலியல்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 141.30 | 147.26 |
| கனடியன் டொலர் | 155.18 | 161.04 |
| யூரோ | 225.40 | 234.97 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 147.39 | 152.14 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 268.87 | 277.34 |
| சுவிஸ் பிராங்க் | 214.20 | 221.78 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 536.06 | கட்டார் ரியால் | 55.25 |
| குவைத் டினார் | 668.36 | சவூதி ரியால் | 53.86 |
| ஓமான் ரியால் | 524.96 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 55.02 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 07ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 17

**குறள் தரும் சிந்தனை**



செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்

*செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து, காலமுணர்ந்து அதனைச் செயல்படுத்தவேண்டும்.*

# மருத்துவ அறிவியலை மக்கள் அலட்சியப்படுத்துதல் தவறு!

உலகெங்கும் கொரோனா தொற்று இவ்வருடத்துக்குள் பெருமளவு தணிவுக்கு வந்துவிடும் என்று மக்களுக்கு நிம்மதி தரும் அறிவிப்பொன்றை உலக சுகாதார நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ளது. உலகில் கொரோனா தொற்று முதன்முதலில் தோற்றம் பெற்று சுமார் இரண்டேகால் வருடங்கள் கடந்துள்ள நிலையில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பானது, மனிதகுலம் மீண்டெழுவதற்கான நம்பிக்கையை நமக்கெல்லாம் ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகள் அனைத்திலும் கொவிட் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் தணிந்து வரும் இன்றைய சூழ்நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. உலக மக்கள் தொகையில் சுமார் எழுபது சதவீதமானோருக்கு கொவிட் தடுப்பூசியின் அத்தனை டோஸ்களும் செலுத்தி முடிக்கப்படுமிடத்து ஆபத்தான கட்டத்தில் இருந்து உலகம் மீண்டெழுந்து விடும் என்று உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

கொவிட் தடுப்பூசி மீதான நம்பிக்கையின் பெயரிலேயே இந்த எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா உட்பட பெருமளவான நாடுகளில் கொவிட் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் தற்போது வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தில் மருத்துவ அறிவியலுக்கே நாம் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

உலகில் பெரும்பாலான மக்களின் உடலில் கொவிட் தடுப்பூசியின் பயனாக நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம் கொவிட் தொற்றுக்குள்ளானோரின் உடலில் இயற்கையான எதிர்ப்புசக்தி தோன்றியுள்ளது. எனவே கொவிட் தொற்றானது மக்களுக்கு பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் பாதிப்பு குறைந்துள்ளதாக மருத்துவ விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கொரோனா வைரஸின் திரிபுகள் புதிதுபுதிதாக உருவெடுத்தாலும் கூட மனிதஉடலில் உள்ள எதிர்ப்பு சக்தி பெருமளவில் இனிமேல் கைகொடுக்கும் என்பதே மருத்துவ நிபுணர்களின் நம்பிக்கையாகும்.

உலகம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சந்தித்து வந்துள்ள நெருக்கடிகள், வேதனைகள் யாவும் விரைவில் முடிவுக்கு வந்து விடும் என்ற செய்தி நிம்மதி தருகின்றது. ஆனாலும் இந்த எதிர்வு கூறல்களை இறுதி நம்பிக்கையாகக் கொண்டு மக்கள் அலட்சியமாக இருந்து விட முடியாது. ஏனெனில் எமது நாட்டில் மட்டுமன்றி அனைத்து நாடுகளிலும் உயிரிழப்புகள் இன்னும் முடிவுக்கு வந்து விடவில்லை. இதுவரை பேணி வந்த அத்தனை விழிப்புணர்வுகளையும் தொடர்ந்தும் மக்கள் கடைப்பிடிப்பதன் மூலமே கொவிட் பெருந்தொற்றில் இருந்து முற்றாக விடுதலை பெற முடியும்.

இதுஇவ்விதமிருக்க எமது நாட்டு மக்களில் பெருமளவானோர் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் ஏற்றிக் கொண்டுள்ளனர். அவர்களில் பெருந்தொகையினர் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டரையும் பெற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இரண்டு தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டவர்களில் ஒரு தொகையினர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுவதாக நாட்டின் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பூஸ்டர் தடுப்பூசியும் பெற்றுக் கொண்டாலேயே கொவிட் தொற்றின் பாதிப்பில் இருந்து கூடுதலான பாதுகாப்புப் பெற முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஏனெனில் பூஸ்டர் தடுப்பூசியின் அவசியம் குறித்து உலக மருத்துவ நிபுணர்களே வலியுறுத்திக் கூறியுள்ளனர். இருந்தபோதிலும் பூஸ்டர் தடுப்பூசி தொடர்பாக மக்கள் மத்தியில் அச்சமும் தயக்கமும் இன்னும் நீங்கியபாடாக இல்லை.

பூஸ்டர் தடுப்பூசியானது பக்கவிளைவுகளையும் குருதி உறையும் தன்மையையும் ஏற்படுத்தும் என்று ஆதாரமற்ற கருத்துகள் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன. எனவே பூஸ்டரை பெற்று கொள்வதில் பலர் இன்னும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இந்த அச்சம் தவறானதாகும். பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொண்டால் குருதி உறையும் தண்மை ஏற்படும் என்று சமூகத்தில் நிலவுகின்ற அச்சம் அநாவசியமானது என்று இலங்கையின் மருத்துவ நிபுணர்கள் பலர் கூறியுள்ளனர். அவ்வாறான கருத்து இன்னுமே நிரூபிக்கப்படவில்லை. எனவே அந்த அச்சத்தை தவிர்த்து மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை தயங்காமல் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பரப்பப்படுகின்ற விஷமத்தனமான கருத்துகளால் மக்கள் மத்தியில் வீணான குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச சுகாதார அமைப்புகளின் முழுமையான அங்கீகாரத்துடன் மக்களின் பாவனைக்கு வந்துள்ள பூஸ்டர் தடுப்பூசி தொடர்பாக பரப்பப்படுகின்ற ஆதாரமற்ற கருத்துக்களை மக்கள் நிராகரிக்க வேண்டும். மருத்துவ அறிவியலின் உச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம், ஆதாரமற்ற அபத்தமான கருத்துகளுக்கு இடமளிப்பது தவறாகும்.

எனவே பூஸ்டர் தடுப்பூசி பெற வேண்டியவர்கள் அனைவரும் வீணான அச்சங்களை ஒதுக்கி வைத்து விட்டு, உடனடியாக அத்தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். கொவிட் தொற்று அச்சம் முற்றாக நீங்கிய உலகுக்குள் நாம் பிரவேசிப்பதாயின் மருத்துவ அறிவியலே எமக்கு கைகொடுக்கும் என்பதை நாம் மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk


# இரத்தினபுரி, எஹலியகொட நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள்




தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள மற்றும் திட்டமிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக அபிவிருத்தி செய்து அதன் பயனை மக்களுக்கு விரைவாக வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வரும் நகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தவும், அதற்கான நன்மைகளை மக்களுக்கு விரைவாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை வழங்கினார்.

அதற்கமைவாக, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரின் பணிப்புரையின் பேரில், ஏற்கனவே அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மற்றும் எஹலியகொட ஆகிய இரண்டு நகரங்களின் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்யும் பணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை தற்போது மேற்கொண்டு வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கிணங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் பொது சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா போன்றோரின் மேற்பார்வையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.













இரத்தினபுரி மற்றும் எஹலியகொட நகர அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் கலந்துரையாடல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இரத்தினபுரி மற்றும் எஹலியகொட நகர அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், நகரில் நிலவும் இட நெருக்கடிக்கு உள்ள தடைகள் அனைத்தும் நீக்கப்படும். நகரத்தில் இயங்கி வரும் முக்கிய மற்றும் துணை வணிக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தும் வகையில் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்திட்டத்தின்படி, நகரத்தில் அமைந்துள்ள ஒழுங்கற்ற பாதைகள், நடைபாதைகள் மற்றும் முக்கிய பொது சேவை மையங்களை மிகவும் பொருத்தமான இடங்களுக்கு மாற்றவும், அந்த இடங்களில் சிறந்த தரமான சேவையை வழங்கவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. இதன் கீழ், நகரின் மையப்பகுதியை இணைக்கும் அனைத்து வீதிகளும் அகலமாக்கப்பட்டு, பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் உள்ள வீதிகள் மற்றும் சந்திகள் சீரமைக்கப்படும்.

இதன் கீழ் தற்போது நகரில் நிலவும் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் பகுதிகளுக்கு பொருத்தமான வண்ணம் பூசவும், அந்த பகுதிகளை ஒரே நிறத்தில் மலர்களால் அலங்கரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, மாணிக்க வியாபாரம் நடைபெறும் நகருக்குள் நீல வண்ணம் பூசப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் முதித டி சொய்சா, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் தலைவர் காஞ்சன ஜயரத்ன, இரத்தினபுரி மேயர் டிரோன் அத்தநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, நகர அபிவிருத்தி அதிகார சபையின் சப்ரகமுவ மாகாண பணிப்பாளர் சுகத் வீரசிங்க மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய அதிகாரிகள் இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**டப்ளியூ.கே.பிரசாத் மஞ்சு...**
*(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)*

# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'இலக்கிய வித்தகர்' விருது பெறுகிறார் நாகேந்திரன்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருதுக்கு கலாநிதி, கலைச்சுடர் நாராயணபிள்ளை நாகேந்திரன் ஜே.பி தெரிவாகியுள்ளார். இவருடைய 45 வருட கால கலை, கலாசார, இலக்கியப் பணிகளின் அளப்பரிய சேவைகளை மதிப்பீடு செய்து இந்த விருது வழங்கப்படுகின்றது.

இவர் கலைமாணி, கலைமுதுமாணி, இந்து தர்மாசிரியர், கல்விசார் பட்டங்களையும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர், பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த முதலாம் வகுப்பு ஓய்வுநிலை அதிபரும், தேசிய கல்வி நிறுவகத்தினால் பிராந்திய நிலையங்களில் நடத்தப்படும் கல்விமாணி பட்டக் கற்கை நெறியின் வருகைதரு விரிவுரையாளருமாவார்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் இலவச புதிய பாடநூலாக்கப் பணியில் எழுத்தாளராகவும், பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

தொடர்ந்து சர்வதேசமட்ட போட்டிகள், தேசிய மட்டப் போட்டிகள் மற்றும் மாகாண, மாவட்ட, பிரதேச மட்டங்களில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் பதக்கங்கள், விருதுகள், சான்றிதழ்கள், பணப் பரிசில்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும் இலக்கியப் படைப்புகளின் ஊடாக சமூகத்தையும், மாணவர்களையும் தன்பால் ஈர்த்துக் கொண்டவர் ஆவார். கலை மரபில் நாடகமும் கூத்தும், நாட்டாரியலில் இசையும் அசையும், பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்கள், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய காவடிச் சிந்து, தாவர உடற்றொழிலியல், சிந்தைக்கு விருந்தாகும் சிறுவர் கதைகள், சிறுவர் இனிய கானம், இந்து சமய தத்துவம் போன்ற நூல்களை வெளியீடு செய்துள்ளார்.



நாராயணபிள்ளை நாகேந்திரன் கலை கலாசார அமைப்புகளில் பல பதவிகளை வகித்தும் வருகின்றார். தேசிய எழுத்தாளர்களுக்கான அமைப்பின் உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட கலாசார அதிகார சபையின் உபசெயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும், ம.தெ.எ.ப பிரதேச கலாசார அதிகார சபையின் முன்னாள் செயலாளரும், தற்போது உபதலைவரும் ஆவார். இப்பிரதேச கலாசாரப் பேரவையின் நீண்டகால நிர்வாக உறுப்பினருமாக பதவி வகித்து வருகின்றார்.

இவர் களுவாஞ்சிகுடி முகாமை ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலயம், களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயங்களில் வண்ணக்கரும், செயலாளருமாக பதவி வகித்தவர். களுவாஞ்சிகுடி சைவ மகாசபையின் தலைவர் பதவியையும் வகித்து சமய அறநெறித் தொண்டுகளைச் செவ்வனே நிறைவேற்றியவர். இவை மட்டுமல்ல பல்வேறு சமூக விளையாட்டுக் கழகங்கள், சிவில் அமைப்புகளில் தலைவர், செயலாளர், பொருளாளர், ஆலோசகர் பதவிகளை வகித்து வந்துள்ளார்.

இவர் ஆற்றிய கல்வி, கலை, கலாசாரம், இலக்கியம், சமூக சேவை, விளையாட்டு, சுகாதாரப் பணிகள், சமயப் பணிகளை கௌரவப்படுத்தும் நோக்கில் அமைச்சுக்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் விருதுகளை வழங்கி கௌரவித்து உள்ளன. அந்த வகையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்ற வரிசையில் தேசிய ஒருமைப்பாடு அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து விவகார அமைச்சும் இந்து கலாசார திணைக்களம் வழங்கிய 'கலைச்சுடர்' மற்றும் கல்வி அமைச்சு வழங்கிய 'குரு பிரதீபா பிரபா' தேசிய விஞ்ஞான மன்றம் வழங்கிய ஐந்து நட்சத்திர விருது, பட்டிருப்பு கல்வி வலயம் வழங்கிய சாதனையாளர் விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களான அகில இன நல்லுறவு ஒன்றியம் வழங்கிய சாமஸ்ரீ வித்யாசாகர், கலாநிதி பட்டங்களும் தேசிய சமாதான சங்கம் வழங்கிய கல்வி சூரி, கீர்த்தி ஸ்ரீ தேசபந்து, விஸ்வம் கம்பஸ் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது, இலங்கை சமாதான கற்கை நிலையம் வழங்கிய சமாதான தூதுவர் பட்டம், சமூகஜோதி, கீர்த்திஸ்ரீ பட்டம் ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

**வ.சக்திவேல்...**

# மட்டக்களப்பு ஸலாமா பௌண்டேஷன் ஏற்பாட்டில் நாளை ஒன்றுகூடல் நிகழ்வு

மட்டக்களப்பு ஸலாமா பௌண்டேஷன் பல துறைசார் சமூகப் பணிகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொண்டு வருகிறது. மட்டக்களப்பு நகரில் வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கைகள் மற்றும் கடைச் சிப்பந்திகளின் வாழ்வாதார பொருளாதார உதவிகள், நிவாரணங்கள் விவகாரங்களிலும் கவனம் செலுத்தி இந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.





அதே போன்று இன, மதம் கடந்து மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுக்களில் முன்னேற்ற செயற்பாடுகளை மேற்கொண்டும் வருகின்ற ஓர் அமைப்பு இதுவாகும்.

ஸலாமா பவுண்டேஷன் உறுப்பினர்கள் சமூக தொண்டாற்றுவதிலும் பிறர் துயர் துடைப்பதிலும் மிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.

கடந்த ஐந்து வருடங்களாக இயங்கி வரும் மட்டக்களப்பு ஸலாமா பவுண்டேஷன் ஜாமிஉஸ்ஸலாம் ஜும்ஆ பள்ளிவாயலை மையமாக கொண்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நாளை (20) முழு நாளும் பாசிக்குடா வளாகத்தில் அதன் ஐந்தாவது வருட ஒன்றுகூடல் நிகழ்வை நடத்தி வர்த்தகர்களுக்கிடையில் ஐக்கியம், இனநல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதுடன், வியாபார நுணுக்கங்களை சமநிலை பேணுவதில் உள்ள இடர்பாடுகளை களைவது பற்றிய விளக்கங்கள் இவ்வொன்றுகூடலில் விரிவுரையாளர்களைக் கொண்டு வழங்கப்படும்.

வர்த்தகர்களின் கலைநிகழ்ச்சிகள் சுவாரஸ்யமான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் என பல அம்சங்கள் இடம்பெறவுள்ளன. கொவிட் 19 சுகாதார விதிமுறைகளைப் பேணி இந்நிகழ்வுகள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

# இலங்கையில் பத்திரிகைத்துறை வளர்ச்சி பெறுவதற்கு உறுதியான அடித்தளமிட்ட அமரர் டி.ஆர். விஜேவர்தன

**இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவராகவும், இந்நாட்டின் அச்சு ஊடகத் துறையை ஒழுங்கமைத்த முன்னோடியாகவும் அமரர் டி.ஆர். விஜேவர்தன விளங்குகின்றார். அவரது பிறந்த தினம் எதிர்வரும் 23 ஆம் திகதியாகும்.**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் இலங்கையின் அச்சு ஊடகத் துறையை ஒழுங்கமைத்து, பத்திரிகை வெளியீட்டுத் துறைக்கென லேக்ஹவுஸ் என்ற தனியான நிறுவனத்தை ஸ்தாபித்தவர் அவர். பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனி தினசரிப் பத்திரிகைகளை தம் நிறுவனத்தின் ஊடாக முதன் முதலில் வெளியிட்ட பெருமைக்குரியவர் அமரர் டி. ஆர். விஜேவர்தன ஆவார். இவர் பத்திரிகைகள் வெளியீட்டுத் துறைக்கு ஆற்றியுள்ள சேவைகள் மற்றும் பங்களிப்புகள் இந்நாட்டு ஊடக வரலாற்றில் அழியாத் தடம் பதித்திருக்கின்றன.

அவர் 1886 இல் கொழும்பில் பிறந்தார். தம் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை உள்நாட்டில் பெற்றுக் கொண்ட டி.ஆர் விஜேவர்தன, உயர்கல்வியை பிரித்தானியாவிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கற்று பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்த இவர், 1912 இல் தாயகம் திரும்பினார். அதனைத் தொடர்ந்து கொழும்பு, புதுக்கடை, உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழிலை ஆரம்பித்தார்.



இக்காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய இயக்கத்தின் செயலாளராக 1913 இல் டி.ஆர். விஜேவர்தன தெரிவானார். அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் போது தங்கியிருந்த வீதியில் அந்நாட்டின் முன்னணி பத்திரிகைகளது அலுவலகங்கள் அமைந்திருந்தன. அதனால் அப் பத்திரிகைகளின் அலுவலகங்களுக்கும் அவர் சென்று வந்தார்.

அவற்றின் ஊடாக பத்திரிகைத் துறையின் முக்கியத்துவத்தையும் அதன் பெறுமதியையும் அவர் உணர்ந்து கொண்டார். அத்தோடு அவரது சக மாணவர்கள் உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில் இந்திய மாணவர்களான லாலா ராஜ்பாட் ராய், பெபின் சந்திர பால், சுரேந்திர நாத் பெனர்ஜி, கோபால் கிரிஷ்ணா கோக்கிலே போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். சக மாணவர்கள் தத்தம் நாடுகளது சுதந்திரத்திற்கு வெவ்வேறு வழிகளில் பங்களித்து கொண்டிருந்ததை இவர் அவதானித்தார்.

இவர் கல்வி பெறவென லண்டன் புறப்பட்ட சமயமும், அங்கிருந்து நாடு திரும்பிய போதும் இந்நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழேயே இருந்தது. ஆனால் இக்காலப்பகுதியில் இந்நாட்டில் சுதந்திரத்தின் தேவையும் முக்கியத்துவமும் உணரப்பட்டது.

இவ்வாறான சூழலில் நாடு சுதந்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை மேலெழுந்து காணப்பட்டது. அதற்கு பத்திரிகை ஊடகம் பெரிதும் பயன்படுமென டி.ஆர். விஜேவர்தன கருதினார். அத்தோடு பௌத்த மறுமலர்ச்சி, தொழிலாளர் மறுமலர்ச்சி உட்பட மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் பத்திரிகைகள் உதவும் எனவும் அவர் நம்பினார்.

இவ்வாறான நிலையில் அன்றைய கால கட்டத்தில் மூடப்படும் நிலையில் காணப்பட்ட 'தினமின' என்ற சிங்கள மொழிப் பத்திரிகையை வாங்கி புதிய தோற்றத்துடன் வெளியிட இவர் தீர்மானித்தார். எச். எஸ். பெரேராவினால் ஆரம்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வந்த இப்பத்திரிகை அவர் நோய் வாய்ப்பட்டிருந்த சூழலில் மூடப்படும் நிலையை அடைந்திருந்தது. இந்த சூழலில் டி. ஆர் விஜேவர்தன இப்பத்திரிகையை கொள்வனவு செய்து 1914 முதல் புதிய தோற்றத்துடன் ஒழுங்கமைத்து வெளியிடத் தொடங்கினார். இதன் ஊடாகப் பத்திரிகை வெளியீட்டுத் துறையில் இவர் காலடி வைத்தார். இப்பத்திரிகைக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கப் பெற்றது.

இதன் விளைவாக சட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த டி.ஆர் விஜேவர்தன பத்திரிகை வெளியீட்டாளரானார். இதே காலப்பகுதியில் அதாவது 1916 இல் ஏ.ஜி. ரூபி மீதெனியாவைத் திருமணம் செய்து குடும்ப வாழ்விலும் பிரவேசித்தார் இவர். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் கிடைக்கப் பெற்றனர்.

பத்திரிகை வெளியீட்டுத் துறையை முழு நேரத் தொழிலாகக் கொண்ட விஜேவர்தன, அத்துறையை மேம்படுத்துவதிலும் அதனை ஆங்கிலம், தமிழ் மொழிகளுக்கு விஸ்தரிப்பதிலும் கவனம் செலுத்தினார்.

இவ்வாறான நிலையில் சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் வெளியிட்டு வந்த ஆங்கில தினசரியான 'த சிலோனிஸ்' என்ற பத்திரிகையை 1918 இல் கொள்வனவு செய்த இவர், அதற்கு 'சிலோன் டெய்லி நியூஸ்' எனப் பெயரிட்டு புதிய தோற்றத்துடன் வெளியிடத் தொடங்கினார். அத்தோடு இப்பத்திரிகைக்கு முக்கிய போட்டிப் பத்திரிகையாக விளங்கிய 'த இன்டிபென்டன்ட்' என்ற பத்திரிகையையும் இவரே வாங்கினார். இவரது ஆங்கிலப் பத்திரிகைக்கும் மக்கள் மத்தியில் நல்ல ஆதவு கிடைத்தது.

## 136 ஆவது பிறந்த தினம் (23.02.1886 – 13.06.1950)

இதேவேளை 1834 முதல் வெளிவந்து கொண்டிருந்த 'த ஒப்சேவர்' பத்திரிகையை 1923 இல் கொள்வனவு செய்தார் விஜேவர்தன. இவ்வாறான சூழலில் 'அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் ' (லேக் ஹவுஸ்) என்ற நிறுவனத்தை 1926 இல் ஸ்தாபித்த இவர், அதன் கீழ் அவரது எல்லாப் பத்திரிகைகளையும் வெளியிட ஆரம்பித்தார்.

அத்தோடு தமது நிறுவனத்தில் ஆசிரியபீடம், நிர்வாகப் பகுதி, விளம்பரப்பகுதி என்பவற்றையும் அறிமுகப்படுத்தி வைத்தார். இவரது சிங்கள மொழிப் பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம், தேவை, அவசியம் என்பன குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆங்கில மொழிப் பத்திரிகை இந்நாட்டு மக்களின் சுதந்திரத்தின் தேவை, எதிர்பார்ப்பு அதற்கான வேட்கை தொடர்பில் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கும் ஆங்கிலம் கற்றவர்களுக்கும் கொண்டு செல்லவும் செய்தது.

நாட்டின் சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் அளித்து இப்பத்திரிகைகள் செயற்பட்டன. குறிப்பாக இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப் பெறுவதற்கு ஏற்ப புதிய அரசியலமைப்பின் தேவையை வலியுறுத்துதல், அது தொடர்பிலான மக்களின் எதிர்பார்ப்பு, அபிலாஷைகள், அவற்றுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய தேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள் 'தினமின' மற்றும் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைகளில் தொடராக வெளியாகின.

முதலாம், இரண்டாம் மனிங் சீர்திருத்த ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைக்கு வந்த போதிலும் அவற்றிலுள்ள பலவீனங்களையும் குறைபாடுகளையும் மாத்திரமல்லாமல் அவற்றின் விளைவாக ஏற்படக் கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் சுட்டிக்காட்டவும் இவரது பத்திரிகைகள் தவறவில்லை. டொனமூர் ஆணைக் குழுவின் யாப்பு சீரமைப்பில் காணப்பட்ட குறைநிறைகளையும் கூட இவரது பத்திரிகைகள் சுட்டிக்காட்டின.

இந்நாடு சுதந்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியதன் தேவை மற்றும் முக்கியத்துவம் குறித்தும், அதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் வேலைத்திட்டங்கள் குறித்தும் தமிழ் பேசும் மக்களிடம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் அவசியத்தை டி.ஆர் விஜேவர்தன உணர்ந்தார். அதன் பிரதிபலனாக 1932.03.15 முதல் 'தினகரன்' என்ற பெயரில் தமிழ்ப் பத்திரிகையை வெளியிடத் தொடங்கினார். இப்பத்திரிகை முற்றிலும் உள்நாட்டு மண்வாசனை மிக்க பத்திரிகையாகத் திகழ வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் அவர் செயற்பட்டார். இதன் ஊடாக ஒரே நிறுவனத்தில் இருந்து மூன்று வெவ்வேறு மொழிகளில் தினசரி பத்திரிகைகளை வெளியிடும் பாரம்பரியத்தை இவர் தொடக்கி வைத்தார். அதன் ஊடாக இந்நாட்டு அச்சு ஊடக வரலாற்றில் டி.ஆர். விஜேவர்தன தனியிடம் பிடித்துள்ளார்.



## அச்சு ஊடகத்துறை கலாசாரத்தை நாட்டில் ஒழுங்கமைத்த பெருமகன்



தினகரன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட முன்னர் இந்நாட்டில் தமிழ் தினசரியொன்று வெளியான போதிலும், அது இந்திய சுதந்திரப் போராட்டம் குறித்த செய்திகளையே இந்நாட்டு மக்களுக்கு வழங்கி வந்தது.

அதனால் இலங்கையின் சுதந்திரத்திற்காக உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் செய்திகளை உள்நாட்டு தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்ல தமிழ் மொழி தினசரி இல்லாதிருந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையிலேயே அவர் தினகரன் பத்திரிகையை ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து பின் வந்த காலங்களில் தினகரன் வாரமஞ்சரி உள்ளிட்ட வார பத்திரிகைகளையும் இவர் வெளியிடத் தொடங்கினார்.

அமரர் விஜேவர்தன, 'நான் ஏன் பத்திரிகைகளை வெளியிட ஆரம்பித்தேன்' என்ற தலைப்பில் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் 1943.3.30 அன்று இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

'நான் சொத்து செல்வங்களை அடைந்து கொள்வதற்காக பத்திரிகை வெளியீட்டுத் துறையில் பிரவேசிக்கவில்லை. பணம் தேட வேண்டிய தேவை இருந்திருப்பின் பத்திரிகைத் துறையை விடவும் பல வசதி வாய்ப்புக்கள் உள்ளன. இத்துறையில் நான் பெரும் அர்ப்பணிப்புகளை செய்துள்ளேன். பொது மக்கள் சேவையும் தேசிய அபிவிருத்தியுமே எனது பத்திரிகை கலையின் நோக்கம்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்த அடித்தளத்தில் தான் அவரது எல்லாப் பத்திரிகைகளும் தொடர்ந்தும் பயணித்து பணியாற்றி வருகின்றன. இந்நாட்டின் சுந்திரத்திற்கு இவரது பத்திரிகைகள் அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளன. சுதந்திரத்திற்கு பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்கும் வகையில் இவரது பத்திரிகைகள் சுட்டிக் காட்டிய விடயங்களை அந்தந்த அரசாங்கங்கள் ஏற்று செயற்பட்டிருக்கின்றன. அதற்கு பல சான்றுகளும் உள்ளன.

குறிப்பாக சுதந்திரத்தின் பின்னர் நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவி வகித்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா மரணிக்கும் வரையும் ஒவ்வொரு புதன் கிழமையும் நாட்டு நடப்புகள் குறித்து டி.ஆர் விஜேவர்தனவுடன் நேரம் ஒதுக்கிக் கலந்துரையாடக் கூடியவராக இருந்துள்ளார். அதேபோன்று டட்லி சேனநாயக்காவும் செயற்பட்டுள்ளார். டி.ஆர். விஜேவர்தன 1950 இல் இயற்கையெய்தும் வரையும் இந்நிலைமை நீடித்துள்ளது. இவ்வாறு இந்நாட்டின் பத்திரிகை வெளியீட்டுத் துறையில் பல்வேறு வகைகளிலும் வரலாற்று தடங்களைப் பதித்துள்ளவராக விளங்குகின்றார் டி.ஆர். விஜேவர்தன.

அவரது நோக்கத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்பவே அவர் ஸ்தாபித்த நிறுவனத்தின் பத்திரிகைகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அவர் மறைந்து 71 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதே பாதையில் பயணிப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். உறுதியானதும் நிலைபேறானதுமான அடித்தளத்தை பத்திரிகை வெளியீட்டு துறைக்கு இட்டுள்ளார் அமரர் டி.ஆர். விஜேவர்தன.

# LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்; நான்கு திட்டங்கள் மக்களிடம் கையளிப்பு

**கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் கீழ் நிறைவுசெய்யப்பட்ட திட்டங்கள் நான்கும் சமீபத்தில் மக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. உலகளாவிய ரீதியில் இலத்திரனியல் மற்றும் வீட்டுப்பாவனை மின் உற்பத்திகளை உற்பத்தி செய்வதில் முதல்வனாக திகழும் LG நிறுவனம், இலங்கையில் இலத்திரனியல் மற்றும் வீட்டுப்பாவனை மின் உற்பத்திகளை விற்பனை செய்வதில் முன்நிலை வகிக்கும் அபான்ஸ் நிறுவனம், Community Chest of Korea அமைப்பு Korea Friends of Hope International Sri Lanka ஆகியவற்றின் கூட்டிணைவில் உறுவாக்கப்பட்ட LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் இலங்கை வாழ் இளைஞர், யுவதிகள் தமது கிராமத்தின் தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.**

இதன் அடிப்படையில் LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் முதலாவதாக பூர்த்திசெய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்ட திட்டமானது, வவுனியா, தரணிக்குளம் கிராம மக்களுக்காக 'உயிர் வாழ்வதற்கு ஒருதுளி நீர்' என்ற கருப்பொருளின் கீழ் கிராமத்தில் வசிக்கும் 610 குடும்பங்களுக்கு தேவையான குடிநீர் திட்டமாகும். நீர் சுத்திகரிப்பு இயந்திர அமைப்பை பொருத்தி அதனூடாக சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டமாகும். இக்கிராமத்தில் சுத்தமான குடிநீர் இல்லாத காரணத்தினால் இந்த கிராமத்தின் அநேகமானவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் இந்த கிராமத்தில் RO நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் மிகவும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதன் இரண்டாவது திட்டமாக மட்டக்களப்பு, சந்திவெளி கிராம மக்களுக்கு பாதுகாப்பான முறையில் மிதப்பு படகில் ஆற்றை கடந்து செல்வதற்கான பாதுகாப்பு மேலங்கி வழங்கப்பட்டது. 'உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பாதுகாப்பு மேலங்கிகளினால் இந்த கிராமத்தில் வசிக்கும் 8000 இற்கு அதிகமான மக்கள் பாதுகாப்பான முறையில் தனது அன்றாட தேவைகளை நிறைவுசெய்து ஆற்றை கடந்து செல்வதற்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. மழைக்காலங்களில் பாரிய அச்சத்தின் மத்தியிலேயே மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக மிதப்பு படகின் மூலம் ஆற்றை கடந்து நகரத்திற்குள் போய் வந்துள்ளனர். இங்குள்ள இயந்திரப் படகில் ஒரு தடவையில் 80 பயணிகளுக்கு செல்ல முடியும். இதில் கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், விவசாயிகள், நோயாளிகள் பயன்பத்தி வருகின்றனர். கிராமத்தை கட்டியெழுப்பு பிரமுகர் மூலம் வழங்கப்பட்ட இந்த பாதுகாப்பு மேலங்கிகளால் மக்கள் எந்த அச்சமும் இல்லாமல் பாதுகாப்பாக படகில் பயணம் செய்ய முடியும்.



THE DROP OF LIFE PROJECT - VAVUNIYA
EVERY LIFE MATTERS PROJECT - BATTICALOA
NURTURING THE FUTURE GENERATION PROJECT - BALANGODA
UPLIFTING THE YOUTH FOR A BETTER TOMORROW PROJECT - AMPARA

LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூன்றாவது திட்டமாக பலாங்கொடை, ஹந்தகிரியாகமை என்னும் கிராமத்தில் 'வளமான தலைமுறையை உருவாக்குவோம்' என்ற கருப்பொருளின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக முறையான பாராமரிப்பின்றி கிடந்த குடும்ப சுகாதாரச் சேவை உத்தியோகத்தர் நிலையத்தை மீளமைப்பு செய்யும் திட்டமாகும். கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதிற்கு குறைந்த குழந்தைகளுக்கான இந்த நிலையம் முற்றாக சேதமுற்று இடிந்து விழும் நிலையில் இருந்தது. அவ்வாறு பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த சுகாதாரச் சேவை உத்தியோகத்தர் நிலையம் கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் முழுமையாக மீளமைத்து மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் நான்காவதும், இறுதித் திட்டமும் ஆகிய அம்பாறை, முவாங்கலை கிராமத்தில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 'விளையாட்டு திறன்மிக்க நாளைய தலைமுறை' என்ற கருப்பொருளின் கீழ் கைப்பந்து மைதானம் புனரமைத்தல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வறை மற்றும் கழிவறைகளை உருவாக்குதல் திட்டமாகும்.

இதன்போது கரப்பந்து விளையாட்டு வீரர்களுக்காக மைதானம் புனரமைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான ஓய்வறை மற்றும் கழிவறைகள் அமைக்கப்பட்டன. முவங்கலை கிராமம் மற்றும் அந்த கிராமத்தை அண்டிய கிராமங்களில் வாழும் 2000 இற்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் இதன் மூலம் பயனடைகின்றார்கள்.

கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் மூலம் இம்முறை நாடளாவிய ரீதியில் நான்கு திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## 47 மீனவர்களும் நேற்று...

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றத்திற்காக இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர்.

அதன் பின்னர் கைதான மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் கடந்த மாதம் 25ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்பட்ட இந்த 56 மீனவர்களில் 9 மீனவர்கள் மட்டும் கடந்த 4 நாட்களுக்கு முன்னர் விமானம் மூலம் தமிழகம் அனுப்பப்பட்டனர். கொழும்பில் இந்திய தூதரக அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் தனிமையில் தங்க வைக்கப்பட்டிருந்த மிகுதி 47 மீனவர்களும் நேற்று காலை விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

## எரிபொருள் விலையை...

என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அந்தளவு கூடுதலான விலை அதிகரிப்பை திணைக்களம் கோரியுள்ளதாகவும் எவ்வாறெனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்ற வகையில் அது நியாயமான வேண்டுகோளாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை உலக சந்தையில் முன்னொருபோதும் இல்லாத வகையில் எரிபொருளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், அந்த நிலைமை தொடர்பில் நிதியமைச்சுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் எனினும் நிதியமைச்சிலிருந்து பதில் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விலையதிகரிப்பு தொடர்பில் நிதி அமைச்சுக்கு தெளிவுபடுத்தியுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் ஈட்டும் நிறுவனமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளதாகவும் அதனை சுமுகமாக முன்னெடுத்துச் செல்வதானால் எரிபொருள் விலையை உடனடியாக அதிகரிக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பெட்ரோல் ஒரு லீட்டரின் விலையை 192 ரூபாவாகவும் டீசல் ஒரு லீட்டரின் விலையை 169 ரூபாவாகவும் அதிகரிக்க வேண்டியது கட்டாயம் எனவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதியமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை இம்முறை அமைச்சரவையில் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் பயணிகள் போக்குவரத்து சேவை, முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருளை பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## கொவிட், டெங்கு குறித்து...

எண்ணிக்கையும் ஒரே நேரத்தில் அதிகரித்து வரும் நிலையில் இது தொடர்பில் நாட்டு மக்கள் அவதானமாக இருக்குமாறும் எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு நோய்களிலும் காய்ச்சல், தலைவலி, உடல்வலி என்பன ஒரே மாதிரியான அறிகுறிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இதனால், நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டால் தாமாக ஒரு முடிவுக்கு வராமல் விரைவில் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது கொவிட் தொற்று மற்றும் டெங்குவின் அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருப்பதால், தவறாக நோயைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்புள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசியல் பொறிமுறை...

அதேவேளை ஊடகத்துறைக்கான ஜனாதிபதி விருது இந்த வருட இறுதிக்குள் வழங்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். அதிலும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கவுள்ளோம்.

ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் யாழ். மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் எத்தனை பேர் உள்வாங்கப்பட்டார்களென்ற தகவல் தெரியவில்லை. காப்புறுதிகள் தொடர்பில் தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளோம். பிராந்திய பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய தவறிவிட்டோம். அந்த தவறை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் அரச அறிவித்தல்களை பிராந்திய ஊடகங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அதனூடாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தகவல்கள் எளிதில் கிடைக்கும்.

அதேவேளை பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகள், கடன் உதவிகள், புலமை பரிசில்கள் என்பன உரிய முறையில் சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

அதனை ஏற்றுக்கொள்கிறோம். இனிவரும் காலங்களில் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவித்தல்களை வழங்கி அவற்றினூடாக பயனாளிகளாக ஊடகவியலாளர்களை தெரிவு செய்யும் பொறிமுறையை ஆரம்பிக்கவுள்ளோம்.

அத்துடன் இந்திய நிதியுதவியில் யாழ்.நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசரா மண்டபத்தில் ஊடகவியளலாளர்களுக்கென ஒரு தொகுதியை ஒதுக்குவது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசவுள்ளோம்.

இத் தொகுதியில் கணனி மயப்படுத்தப்பட்ட நூலக வசதிகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதனூடாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு பெரிதும் நன்மை பயக்குமென நம்புகிறோம்.

ஊடகவியலாளர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுவதில்லை.

ஊடகவியலாளர்களை தொழில் முறை ஊடகவியலாளர்களாக மாற்றுவதன் மூலமே இது சாத்தியமாகும். அதற்காகவே ஊடகவியலாளர்களுக்கு பட்டயக்கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கிறோம்.

அதன் மூலம் சிறந்த தொழில் முறை ஊடகவியலாளர்களை உருவாக்க முடியுமென நம்புகிறோமென மேலும் தெரிவித்தார்.

## நாளாந்தம் இரண்டுமுறை...

மணி முதல் இரவு 10.30 வரையான காலப் பகுதியில் 45 நிமிடங்களும் இவ்வாறு மின்விநியோகம் துண்டிக்கப்படும்.

நாடுதழுவிய ரீதியிலான மின் விநியோக துண்டிப்பை இரு வார காலத்திற்கு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மின்னுற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் கிடைப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டால் இன்றும் (19) நாளையும் (20) மின்விநியோகத்தை துண்டிப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

## ரயில் பயணச்சீட்டுக்கள்...

முன்பதிவு செய்ய முடியும் அல்லது கையடக்க தொலைபேசி செயலி ஊடாக ஆசனத்தை முன்பதிவு செய்ய முடியும் என இலங்கை ரயில்வே சேவையின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். இதற்கான கையடக்கத் தொலைபேசி செயலி விரைவில் அறிமுகப்படுத்தப்படும். பயணிகளின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்த வசதி கிடைக்கும். பயணிகள் கடன் அட்டைகளை பயன்படுத்தியும் பணம் செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கை வருகிறார்...

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் உதவி இராஜாங்க செயலாளராக பதவியேற்ற பின்னர், அவர் முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்கிறார். டொனால்ட் லு, நேற்று முன்தினம் தொலைபேசியில் செய்தியாளர்கள் சிலருடன் பேசியுடன் அடுத்த மாதம் பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலக தமிழர் பேரவை ஆகிய தரப்புடன் கடந்த நவம்பர் மாதம் வொஷிங்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தை ஒன்றிலும் டொனால்ட் லு கலந்துக்கொண்டார்.

## ஐ.நாவில் எத்தகைய அழுத்தம்...

கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

'ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றிக் கொள்ளும். ஜெனிவா விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையும் உள்ளது. ஆகையால், ஐ.நா.மனித உரிமை பேரவையின் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு சாதகமான முறையில் இன்று பதிலளிக்கப்படும்' என அவர் கூறியுள்ளார்.

## SLBCயில் பியானோ...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் (17) கொழும்பு பிரதான நீதிவான் புத்திகசி ராகல உத்தரவிட்டார்.

பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க கடந்த 2021 ஜூலை மாதம் முதலாம் திகதி சிஐடியில் முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய இது தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்ததாக விசாரணை அதிகாரிகள் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவானுக்கு அறிவித்தனர். இதன்போதே கொழும்பு பிரதான நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பில், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சட்ட அதிகாரியான சம்பா சமன்மலி பெரேரா என்பவரின் வாக்குமூலம் பெறப்பட்டதாக நீதிமன்றுக்கு அறிவித்த விசாரணையாளர்கள், இதுவரையிலான விசாரணைகளுக்கமைய 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்து துஷ்பிரயோக தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்று நிகழ்ந்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தனர்.

இந்நிலையில் குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விரைவில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்வதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவு – 2 இன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜனக மாரசிங்க தலைமையிலான விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் ஆஜராகி விடயங்களை முன்வைத்தனர்.

## நாட்டில் ஒமிக்ரோன்...

வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒமிக்ரோன் பிறழ்விற்கான பல அறிகுறிகள் தென்படாது என்பதை சுட்டிக்காட்டிய விசேட வைத்திய நிபுணர், நோய் அறிகுறிகள் தென்படாத காரணத்தினால் அன்டிஜன் அல்லது PCR பரிசோதனைகளை மேற்கொள்ளாத குறிப்பிட்ட சதவீத கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் இருப்பதால் மேலும் தொற்று பரவலாம் எனவும் கூறியுள்ளார்.

## நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார...

கொள்கைப் பிரகடனத்துக்கமைய, 2030 ஆம் ஆண்டாகும் போது இந்த நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்களின் மூலம் பெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. அதேபோன்று, நாட்டுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு, மீள் புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டின் மூலம் குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதற்குள்ள இயலுமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, புதிதாக ஆரம்பிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் தொடர்பில் ஆராய்வதும், ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

## ஐ.தே.க. பிரதேசசபை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஹபராதுவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், கரந்தெனிய பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், பத்தேகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், யக்கலமுள்ள பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மற்றும் பெந்தோட்டை பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் இதில் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 7 பிரதேச சபை உறுப்பினர்களும் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கன்றி ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## 05 சட்டமூலங்களுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

அதன்படி, 2022 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 2022 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடை செய்தல் சட்டம், 2022 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க நீதித்துறை (திருத்தச்) சட்டம், 2022 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க மாகாணசபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) (திருத்தச்) சட்டம் ஆகிய சட்டங்கள் (17) முதல் நடைமுறைக்கு வருகின்றன.

## A/L பரீட்சையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

கற்றதற்கான பிரதிபலனை அடைய முடியும். இந்த வருட உயிரியல் வினாத்தாளின் பல வினாக்களின் மொழிபெயர்ப்பு பிழை காரணமாக மாணவர்களால் தெளிவாக விடையைத் தீர்மானிக்க முடியாத நிலையேற்பட்டதால் பல மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மொழி மூல மாணவருக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியாகும். இது அவர்களது பல்கலைக்கழகத் தெரிவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த அநீதி களையப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## நெருக்கடியில் உள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

பணியகத்தை திறந்து வைக்க மாத்திரமன்றி இங்குள்ள ஊடகவியலாளர்களின் பிரச்சனைகள் தொடர்பாக ஆராயவும் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும வருகை தந்திருந்தது மிகப்பெரிய விடயம்.

எமது மாவட்டத்தில் பல ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் உள்ள போதிலும் அவர்களுக்கான ஊதியம் போதுமானதாக இல்லை. ஊடகர்கள் சகல வசதி வாய்ப்புக்கள்,சலுகைகளையும் பெற வேண்டும்.இங்கு குடியிருக்க சொந்த வீடு கூட இல்லாத ஊடகவியலாளர்கள் பலர் உள்ளனர். வீட்டுத்திட்டங்களில் இவ்வாறான ஊடகவியலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில ஊடகங்கள் அச்ச உணர்வினை ஏற்படுத்தி வருகின்றன.அதனை பார்க்கும் மக்கள் மனநிலை வேறு நிலையில் காணப்படுகிறது. மக்கள் மத்தியில் எதிரான கருத்துக்களை மட்டும் விதைக்காமல் நேர் சிந்தனைகளையும் விதைக்க ஊடகங்கள் முன்வர வேண்டும்.

## மனுதாரர் தரப்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, அரசியலமைப்பின் 58 மற்றும் 61 ஆவது சரத்துகளின் பிரகாரம் அரச சேவை ஆணைக்குழுவின் முன்வைக்கப்பட்ட விடயத்தை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையெனத் தெரிவித்தார்.இதனை பரிசீலிக்க உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரமுள்ளது என்றும் அவர் கூறினார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதியரசர் மனுவை மார்ச் 04 ஆம் திகதி மீள பரிசீலிக்க உத்தரவிட்டார். (பா)

## சமூக அக்கறையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

வெளிப்படுத்துகின்ற அமைச்சர் டளஸ் அழகப்பெரும, 2013 ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் சேர் பொன்னம்பலம் மாவத்தை என்று வீதிக்கு பெயர் சூட்டியதையும் நினைவுபடுத்தினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கரை காண விரும்பும் கப்பலுக்கு ஒளி காட்டும் கலங்கரை விளக்காக ஊடகங்கள் திகழவேண்டும். நிமிர்ந்தெழ விரும்பும் மக்களுக்கு அறிவூட்டும் கல்வியாக ஊடகங்கள் இருக்க வேண்டும்.

## பட்டாசு கொளுத்தி பிரதேச... (03 ஆம் பக்கத் தொடர்)

வல்லுறவு, சித்திரவதை குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இந்நிலையில் நீலக, கடந்த 11ஆம் திகதி தனது மனைவியின் கை, கால்களை வெட்டியதுடன், தலையிலும் பலத்த காயம் ஏற்படுத்தியதால் மனைவி தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். சில வருடங்களுக்கு முன்னர் ஹொரணை, கிரிகலஹேன பிரதேசத்தில் சித்திரவதை கூடம் ஒன்றை நடத்தி பலரை கடத்திச் சென்ற சித்திரவதை செய்து பொதுமக்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில் நீலக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இந்நிலையில் விளக்கமறியலில் இருந்து விடுவிக்கப்பட்டதும், கடந்த வாரம் மனைவியின் கை, கால்களை நீலக வெட்டியதாகவும் கூறப்படுகின்றது. நேற்று முன்தினம் நீலக்க சந்தருவன் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்ததையடுத்து நேற்று ஹொரணை பிரதேசத்தில் பொதுமக்களால் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமுதித்த வீடு தாக்குதல்.. (03 ஆம் பக்கத் தொடர்)

இதன் போது அத்துரலியே ரதன தேரர், கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்டோர் குறித்த முக்கியமான விடயங்கள், சம்பவங்கள் பற்றி பேசப்பட்டிருந்தது. சமுதித்தவின் பிலியந்தலை வீட்டிக்கு வாகனம் ஒன்றில் சென்ற நான்கு பேர், கடந்த 15 ஆம் திகதி இந்த தாக்குதலை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.''

## மலையக மக்களின்...

கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் மலையக சிந்தனையாளர்கள் கலந்துக்கொள்வார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

இறுதி வடிவம் பெறுகின்ற இந்த ஆவணம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட அனைத்து கட்சி தலைவர்கள், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட தமிழக கட்சி தலைவர்கள், பிரிட்டன், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாட்டு அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு சேர்ப்பிக்கப்படும்.

அத்துடன் இந்த ஆவணம் தேசிய ரீதியான கலந்துரையாடல்களுக்காக நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கப்படும். சிவில் சமூக அமைப்புகளுடன் நாம் நடத்த உத்தேசித்துள்ள கலந்துரையாடல்கள், இலங்கை, இந்தியா, பிரிட்டன் மற்றும் சர்வேதச அரசு நிறுவனங்களுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம்.

புதிய அரசியலமைப்பு வரைபை தாயரித்து வரும் தனது உத்தேசத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிய அரசியலமைப்பு வரைபு எழுதப்பட்டு வருவதையும் நாமறிவோம். இந்த பின்னணியில் இன்றைய சூழலில் எழுந்துள்ள புதிய நிலைமைகளை கருத்தில் கொண்டு மலையக மக்கள் தொடர்பாக விரிவுபடுத்தப்பட்ட நிலைப்பாட்டு கோரிக்கைகளை நமது நாட்டு அரசுக்கு அறிவித்து, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் உதேசித்துள்ளோம்.

அதேவேளையில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வரும் உதவிகள் மற்றும் அதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய கருத்து பறிமாற்றங்களையும் நாம் அவதானித்து வருகிறோம். இந்த தொடர்பாடல்கள், பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுவது முறையானதல்ல என நாம் நம்புகின்றோம்.

1954 (நேரு – கொத்தாவலை), 1964 (சிறிமா–சாஸ்திரி),1974 (சிறிமா–இந்திரா), ஆகிய ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசு தலைவர்கள் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின்படியும், இந்திய பிரதமர்களுக்கும், இலங்கை ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்தன, ஆர். பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்படியும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் இந்திய அரசுக்கும் இருக்கின்ற கடப்பாடுகள் நல்லெண்ண அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியின் எதிர்பார்ப்பாகும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசுக்கும், தமிழக அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பையும் தமிழ் முற்போக்கு கூட்டணி நிறைவேற்றும்.

அதேவேளை மலையக தோட்ட தொழிலாளர்களை இலங்கை தீவுக்கு அழைத்து வந்து பெருந்தோட்ட பொருளாதாரத்தை கட்டி எழுப்பி, பயன்பெற்றதன் அடிப்படையில் பிரித்தானிய இராணியின் அரசாங்கத்துக்கும், மலையக மக்கள் தொடர்பில் இருக்கின்ற பெரும் கடப்பாட்டையும் எடுத்து கூறி, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவு செய்துள்ளது.

நாம் முன்வைக்கவுள்ள, இந்திய வம்சாவளி மலையக மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் இந்த அரசியல் ஆவணம், மேற்கண்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு நட்புறவு மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம். இது தொடர்பில் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களினதும், அனைத்து சகோதர மக்களினதும் ஒத்துழைப்புகளையும், ஆதரவையும் நாம் கோருகிறோம் என தெரிவித்துள்ளார்.

## குற்றச்சாட்டுகளிலிருந்து...

அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

நீதியரசர்களான நாமல் பலாலே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

கடந்த 2021 மே மாதம் 3 ஆம் திகதி முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோருக்கு எதிராக, 2019 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில், உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் குறித்து கொலை மற்றும் கொலை முயற்சி குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய தகவல்களை காட்சிப் படுத்தும் நடவடிக்கை முதலில் கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் முன்னெடுக்கப்பட்டது.

பூஜித் ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகிய இருவருக்கும் எதிராக மூவர் கொண்ட விஷேட நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் தனித்தனியாக வழக்கு விசாரணைகளை இரண்டினை முன்னெடுக்குமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை முன்வைக்கும் முகமாகவே இவ்வாறு தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

அதற்கான கோரிக்கை சட்ட மா அதிபரால், பிரதம நீதியரசரிடம் எழுத்து மூலம் கடந்த 2021 மே 3 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

2019 ஏப்ரல் 7 ஆம் திகதிக்கும் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், தேசிய உளவுச் சேவையின் பணிப்பாளர்ளராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவிடம் இருந்து கிடைக்கப் பெற்ற, இரகசிய மற்றும் உளவுத் தகவல்களை கணக்கில் கொள்ளாது இருந்தமை, அதனை மையப்படுத்தி நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக சஹ்ரான் மற்றும் அவரது குழுவினர் மத வழிபாட்டுத் தளங்கள், ஹோட்டல்கள் மற்றும் வேறு இடங்களில் குண்டுத் தாக்குதல் நடாத்த ஒருங்கிணைந்துள்ளதாகவும், இறுதிக் கட்ட தயார் நிலையில் உள்ளதாகவும் அந்த தகவல்கள் அளிக்கப்பட்டும் அவற்றை கணக்கில் கொள்ளாமல் பாராமுகமாக நடந்துகொண்டமை ஊடாக 279 பேரின் மரணத்துக்கும் சுமார் 500 பேர் வரையிலானோரின் காயங்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும் எனும் வகையில், பூஜித் மற்றும் ஹேமசிறிக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் 296 மற்றும் 300 ஆம் அத்தியாயங்களின் கீழ் கொலை மற்றும் கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஹேமசிறி பெர்ணான்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் கடந்த 2019 ஜூலை 2 ஆம் திகதி ஏப்ரல் 21 தாக்குதல்களை தடுக்காமை தொடர்பில் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டனர்.

தண்டனை சட்டக் கோவையின் 296, 298, 326,327,328 மற்றும் 410 ஆம் அத்தியாய்ங்களின் கீழ் இவர்கள் இருவரும் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றினை புரிந்ததக கூறி அவர்கள் அப்போது கைது செய்யப்பட்டனர்.

எனினும் 2019 ஜூலை 9 ஆம் திகதி, அப்போதைய கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன குறித்த இருவருக்கும் பிணையளித்திருந்தார்.

எனினும் அப்பிணை உத்தரவை ஆட்சேபித்து சட்ட மா அதிபர் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மீளாய்வு மனுக்கமைய, இந்த விவகாரத்தில் பூஜித், ஹேமசிறி ஆகியோரின் பிணை ரத்து செய்யப்பட்டு 2019 ஒக்ரோபர் 9 ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அதன் பின்னர் மேல் நீதிமன்றம் ஊடாக அவர்கள் பிணைப் பெற்றுக்கொண்ட நிலையில், அந்த விடயம் குறித்த விசாரணைகள் நிறைவடைந்திருந்தன.

இவ்வாறான நிலையிலேயே தற்போது அவ்விருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் மேல் நீதிமன்றில் முன் வைக்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு நீதிபதிகளும் பெயரிடப்பட்டு, குற்றப் பத்திரிகையும் கையளிக்கப்பட்டு விசாரணைகள் தனித்தனியாக இடம்பெற்று வருகின்றன.

அதன்படியே கடந்த ஜனவரி 20 ஆம் திகதி முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கின் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியங்கள் நிறைவுக்கு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எனது குடும்பத்தை காப்பாற்ற நெசவுத் தொழிலே கைகொடுத்தது

## - ஏ.எல்.சித்தி பரீதாவின் துயரம்

எனது கணவர் திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நான் இளம் பிராயத்தில் பழகியிருந்த நெசவுத் (கைத்தறி) தொழிலே தற்போது எனது குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்கு ஓரளவேனும் கை கொடுத்து வருகின்றது என, நெசவுத் தொழிலாளியான 60 வயதுடைய ஏ.எல்.சித்தி பரீதா தெரிவிக்கின்றார்.

ஆரையம்பதியை வசிப்பிடமாகக் கொண்ட ஏ.எல்.சித்தி பரீதா, தனது வாழ்க்கையில் எதிர்பாராதவிதமாக நேர்ந்த துயரத்தை தினகரன் வாசகர்களுக்காக விவரிக்கின்றார். அவர் மேலும் விவரிக்கையில்,

எனது 20ஆவது வயதில் எனது கணவருடன் திருமண பந்தத்தில் இணைந்து எமது இல்லற வாழ்க்கை இனிதே கடந்ததுடன், அதன் பயனாக எமக்கு மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர். இந்நிலையில் எனது கணவர் மேசன் தொழில் செய்து எமது குடும்பச் செலவை நன்றாகக் கவனித்து வந்தார்.

இவ்வாறிருக்கையில் கடந்த 2013ஆம் ஆண்டு எனது கணவர் திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார். அவரைக் குணப்படுத்துவதற்காக வைத்தியசாலைகள் தோறும் அலைந்தும் அவரைக் குணப்படுத்த முடியாமல் போனது. எனது கணவரும் எந்தவித வேலைகளும் செய்ய முடியாத நிலையில், வீட்டோடு முடங்கிப் போய்விட்டார்.

எனது கணவர், பிள்ளைகளுடன் மிகவும் சந்தோஷமாகக் கழிந்த எமது குடும்ப வாழ்க்கை சூனியமாகிக் போனதுடன், துயரமும் என்னை விட்டு வைக்கவில்லை. இந்நிலையில், எமது குடும்ப பொறுப்பை சுமக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நான் தள்ளப்பட்டேன்.

ஒரு பக்கம் துயரம் என்னை படாய்படுத்திய போதிலும், மனதளவில் அதற்கு இடங்கொடுக்காது எனது கணவரையும் பெண் பிள்ளைகளையும் காப்பாற்ற வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டேன். கணவருக்கும் பிள்ளைகளுக்காகவும் வாழ வேண்டுமென்று எண்ணினேன்.

எனது பெற்றோருடன் இருந்த காலத்தில் குடும்ப வறுமை காரணமாக நான் எனது 25ஆவது வயது முதல் நெசவுத் தொழிலுக்கு சென்றிருந்தேன். அதன் பின்னர் சிறிது காலம் கணவர், பிள்ளைகள் என இருந்த நிலையில் எனது நெசவுத் தொழிலை இடைநிறுத்தியிருந்தேன்.

இவ்வாறான நிலையில் நான் ஏற்கெனவே செய்திருந்த நெசவுத் தொழிலில் இணைந்து வேலை செய்வதற்கு தீர்மானித்தேன். எம்.வை. ஆதம் என்பவர் ஆரையம்பதியில் நடத்தும் ஏ.ஆர்.கைத்தறி உற்பத்தி நிலையத்தில் இணைந்து நெசவுத் தொழிலை செய்வதற்கு ஆரம்பித்தேன்.

தற்போது நெசவுத் தொழிலில் 20 வருடகால அனுபவமிக்க ஒருவராக நான் திகழ்கின்றேன் என்கிறார் அவர்.

எமது ஏ.ஆர்.கைத்தறி உற்பத்தி நிலையத்திற்குச் சொந்தமாக 14 கைத்தறிகள் உள்ளன. இந்நிலையில் அத்தொழிற்சாலைக்கு வந்து வேலை செய்ய முடியாமல் தூர இடங்களிலுள்ள 6 பெண்களுக்கு அவர்களது வீடுகளிலிருந்தவாறே நெசவுத் தொழில் செய்வதற்கேற்ற வகையில் 6 கைத்தறிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பெண்கள் வீடுகளிலிருந்தவாறு தங்களது வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு, நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டு வருமானம் ஈட்டுகின்றனர். ஏனைய 8 கைத்தறிகள், ஏ.ஆர். கைத்தறி உற்பத்தி நிலையத்தில உள்ளன. அந்நிலையத்தில்; நான் உட்பட 4 பெண்களும் 4 ஆண்களும் வேலை செய்கின்றோம் என்கிறார் அவர்.



அம்பாறை, மருதமுனையிலுள்ள தொழிற்சாலையொன்றிலிருந்து நூல் உள்ளிட்ட மூலப்பொருட்களை எமது தொழிற்சாலை முதலாளி மொத்தமாக பெற்றுக் கொண்டு வந்து, இங்கு பயன்படுத்துகின்றார். எமது உற்பத்திகளுக்கு வேண்டிய வகையில் நூல்களுக்கு சாயமூட்டப்பட்டு அத்தொழிற்சாலையால் தரப்படுகின்றன.

இந்நிலையில், பெண்களுக்குரிய சாரிகளையும் ஆண்களுக்குரிய சாரங்களையும் நாம் தயாரிக்கின்றோம். ஒரு நாளைக்கு சுமார் 30 சாரங்களும் சுமார் 4 சாரிகளும் எமது ஏ.ஆர்.கைத்தறி உற்பத்தி நிலைய ஊழியர்களினால் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு எமது ஊழியர்களினால் தயாரிக்கப்படும் சாரிகளும் சாரங்களும் மருதமுனையிலுள்ள மொத்த விற்பனை நிலையங்களுக்கு விநியோகிப்பதுடன், மட்டக்களப்பிலுள்ள புடைவைக் கடைகளுக்கும் விநியோகித்து வருமானத்தை ஈட்ட வழிவகை செய்கின்றோம்.

எம்மால் நெய்யப்படும் நெசவு சார்ந்த உடு புடைவைகளுக்கு கேள்வி அதிகமாகவே இருக்கின்றன. அனைவரும் விரும்பி வந்து வாங்குகின்றனர். அதிலும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களே நெசவுத் தொழில் சார்ந்த உடு புடைவைகளை அதிகளவில் வாங்குகின்றனர் என்கிறார் அவர்.

கொரோனாத் தாக்கமும் எமது தொழிலை விட்டு வைக்கவில்லை. கொரோனா காலத்தில் நாடு முடக்கப்பட்டிருந்த சூழ்நிலையில், எமது தொழிலிலும் சற்று பின்னடைவை எதிர்நோக்கியிருந்தோம். இருந்த போதிலும், தற்போது நாடு வழமையான சூழ்நிலைக்கு திரும்பி வரும் நிலையில், எமது நெசவுத் தொழில் மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது என்கிறார் அவர்.

எனது கணவர் நோய்வாய்ப்பட்டதை தொடர்ந்து 12 வருட காலமான இவ்வாறான தொழில் ரீதியான வேலைப்பளுவுக்கு மத்தியிலும் என்னால் இயன்றவரை நான் எனது குடும்பத்தைக் நன்றாகக் கவனித்து வருகின்றேன். காலை 7.00 மணிக்கு நெசவுத் தொழிலுக்காக தொழிற்சாலைக்குச் சென்று மதியம் 12.00 மணிக்கு வீடு திரும்புவேன். இவ்வாறு வீடு திரும்பும்பொழுது எமது சாப்பாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கடையில் வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் செல்வேன்.

அதன் பின்னரே மதியநேர உணவைத் தயாரித்து, எனது கணவர் உள்ளிட்டோருக்கு கொடுத்துவிட்டு, நானும் உட்கொள்வேன். அதன் பின்னர் மீண்டும் பிற்பகல் 2.00 மணிக்கு நெசவு நெய்வதற்குச் சென்றுவிட்டு மாலை 6.00 மணிக்கு வீடு திரும்புவேன்.

அதன் பின்னர் இரவுப்பொழுதில் எஞ்சியுள்ள எனது வீட்டு வேலைகளைக் கவனிப்பேன்.


> எனது கடினமான உழைப்பின் உதவியுடன் எனது முதல் இரண்டு பெண் பிள்ளைகளையும் ஒருவாறு கரை சேர்த்துள்ளேன். மூன்றாவது பெண் பிள்ளை எங்களுடன் உள்ளார். அவருக்கு இப்போது 16 வயதாகிறது. எமது குடும்பக் கஷ்டத்தின் காரணமாக எமது மூன்றாவது பெண் பிள்ளையின் பாடசாலைக் கல்வியை அவர் 9ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்தபோதே இடைநிறுத்தியிருந்தேன். அப்பிள்ளையை மேற்கொண்டு கல்வி கற்க வைப்பதற்கான போதிய வசதி என்னிடம் இல்லை.

எனது கடினமான உழைப்பின் உதவியுடன் எனது முதல் இரண்டு பெண் பிள்ளைகளையும் ஒருவாறு கரை சேர்த்துள்ளேன். மூன்றாவது பெண் பிள்ளை எங்களுடன் உள்ளார். அவருக்கு இப்போது 16 வயதாகிறது. எமது குடும்பக் கஷ்டத்தின் காரணமாக எமது மூன்றாவது பெண் பிள்ளையின் பாடசாலைக் கல்வியை அவர் 9ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்தபோதே இடைநிறுத்தியிருந்தேன். அப்பிள்ளையை மேற்கொண்டு கல்வி கற்க வைப்பதற்கான போதிய வசதி என்னிடம் இல்லை.

ஆனாலும், அப்பெண் பிள்ளை தனது காலில் நிற்க வேண்டும் என்பதற்காக தையல் கலையை பழக்கியுள்ளேன். அப்பெண் பிள்ளை, தையல் தொழிலை செய்வதற்கு தையல் இயந்திரம் தேவையாக உள்ளதுடன், அதை வாங்கும் பண வசதி தற்போது என்னிடம் இல்லை. நான் உழைக்கும் சம்பளம் எமது அன்றாட உணவுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது என்கிறார் அவர்.

எனது துயரமான வாழ்க்கைக்கு மத்தியிலும் வளர்ந்து வரும் பெண் பிள்ளைகளும் ஒன்றை மாத்திரம் நான் கூற விரும்புகின்றேன். நாம் எண்ணியவாறு எமக்கு வாழ்க்கை அமைவதில்லை. எதிர்பாராதவிதமாக எமது வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படலாம். அது நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம்.

ஆகையால் நாம் ஏனையோரிடம் கையேந்தாமல் எமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல ஏதாவதொரு சுய தொழிலை பழகியிருக்க வேண்டும் என்கிறார் அவர்.



ஆர்.சுகந்தினி...

---

சிந்து மாகாணத்தில்

# மாணவர் சங்கங்கள் மீதான தடை நீக்கம்



பாகிஸ்தான் சிந்து மாகாண பாடசாலைகளில் மாணவர் சங்கங்களை அமைப்பதற்கு சிந்து மாகாண சபை அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பான மசோதா மாகாண அவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதையடுத்து 38 வருடங்களாக நீடித்த தடை நீங்கியுள்ளது.

இம் மசோதா ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறித்து பேசிய மாகாண முதல்வர் சையத் முராட் அலிஷா, இதை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் மாணவர் சங்கங்கள் பாடசாலைகளில் சாதகமான தன்மைகளை ஏற்படுத்தும் என தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

இச்சட்டம் அமுலுக்கு வந்ததும், பாகிஸ்தானிலேயே மீண்டும் மாணவர் சங்கங்களை ஏற்படுத்திய முதல் மாகாணமாக சிந்து மாகாணம் திகழும்.

1984ம் ஆண்டு அன்றைய இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் ஸியாவுல் ஹக் மாணவர் சங்கங்களை தடை செய்தார். 1989ம் ஆண்டில் இத்தடையை பெனாஸிர் பூட்டோ நீக்க உத்தரவிட்டார். எனினும் பாக், உயர் நீதிமன்றம் நாடு முழுவதும் அமுலாகும் வகையில் 1993ம் ஆண்டு இச் சங்கங்களுக்கு தடை விதித்து உத்தரவிட்டது.

கல்லூரி, பல்கலைக்கழங்களில் அரசியல் இருக்கக் கூடாது என்பதாலேயே தடை விதிக்கப்பட்டது. இத்தடையே இப்பொது சிந்து மாகாணத்தில் நீக்கப்பட்டுள்ளது.

# மத நிந்தனை குற்றச்சாட்டில் பாக். ஆசிரியருக்கு ஆயுள் சிறை



பாகிஸ்தான் சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இந்து கல்லூரி ஆசிரியருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் ஆயுள் தண்டனையும் விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருப்பதாக டெய்லி பாகிஸ்தான் பாத்திரிகை கடந்த செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. மத நிந்தனை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அரசு டிகிரி கல்லூரியின் ஆசிரியரான நூட்டன் லால் என்பவரே இக் குற்றச்சாட்டின் பேரில் 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இவரது பிணை மனுக்கள் இரண்டு தடவைகளும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. கடந்த 2019 ஆம் ஆண்டு ஒரு மாணவன் ஒரு உள்ளூர் பாடசாலையில் மத நிந்தனை இடம்பெற்றிருப்பதாக சமூக வலைத்தளமொன்றில் வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்ததையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற 1947 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஆயிரத்து 415 மத நிந்தனை வழக்குகள் போடப்பட்டிருந்த போதிலும் உண்மையான மத நிந்தனைச் சம்பவங்கள் மிக அதிகம் என்று ஒரு ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 1947 2021 காலப் பகுதியில் மாத்திரம் 18 பெண்களும் 71 ஆண்களும் மத நிந்தனைக் குற்றச் சாட்டின் பேரில் கொலைசெய்யப்பட்டிருப்பதாகவும் உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும் என்றும் 'டோன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் மத நிந்தனை தொடர்பான சம்பவங்களுடன் தொடர்புடையோரில் 70 சதவீதமானோர் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹொரவபொத்தான பகுதியில்

# இரண்டாயிரம் கிலோ சட்டவிரோத மாட்டிறைச்சி கைபற்றல்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹொரவபொத்தான பகுதியிலிருந்து கொழும்பு தெமடகொட பகுதிக்கு கூழர் வாகனமொன்றில் இரண்டாயிரம் கிலோவிற்கும் அதிகமான மாட்டிறைச்சியினை எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய ஹொரவ பொத்தான வில்லவெவ பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன் மாட்டிறைச்சியையும் கூழர் வாகனத்தையும் ஹொரவபொத்தான பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 40, 45 வயதுடைய வெள்ளவத்தை மற்றும் கண்டி பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஹொரொவ பொத்தான திம்பிரிஅத்தாவெவ பகுதியில் பசுமாடுகளை அறுத்து இறைச்சியினை கூழர் வாகனத்தில் எடுத்துச் செல்வதற்கு சிலர் ஆயத்தமாவதாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கு அமையவே சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவபொத்தான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


திகதி 17.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4681
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,385,810.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 0 5 5 8 8 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,306,901.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2976
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,112,160.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 17 26 30 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,996,984.00

Mega POWER மெகா பவர் 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1029
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,525,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,435,282.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O சுப்பர் இலக்கம் 25 வெற்றி இலக்கங்கள் 03 15 51 60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 711
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,803,200.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 06 09 21 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,708,854.40

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0022
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,180,960.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 11 43 44 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,576,149.96

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 357
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,287,720.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 37 55 60 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,375,148.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி 19
சனிக்கிழமை

# அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் யாழ். மாவட்ட கிளை அலுவலகம் திறந்து வைப்பு





அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரசாங்க வெளியீட்டு பணியகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் காலை 10 மணியளவில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்க வெளியீட்டு பணியகத்தின் ஏழாவது மாவட்ட அலுவலகமாக யாழ்ப்பாணத்தில் இந்த அலுவலகம் அமையவுள்ளது.

இதற்கு முன்னர் கண்டி, காலி, அனுராதபுரம், வவுனியா, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இப்பணியகம் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகளை வார நாட்களில் இங்கு விலைக்கு பெற்றுக் கொள்ள முடியும்.




இந்நிகழ்வில் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் ஆகியோரும் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், அரசாங்க தகவல் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணம்

## மலேரியா நோய் பரவும் அபாயம்

வட மாகாணத்தில் தற்பொழுது மலேரியா நோய் பரவும் அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ் விடயங்களை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நான்கு வார காலத்துக்குள் 4 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரு நோயாளரை அடையாளம் காண்பதன் மூலம் அது ஆயிரம் நோயாளர்களின் ஆரம்பமாக அமையும் என சுகாதார அமைச்சின் மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

நான்கு நோயாளர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார். எனவே இந்நோய் பரவும் அபாயம் அதிகளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருப்பதாக குறிப்பிட்ட அவர், ஏனைய மாவட்டங்களில் இந்த நோய் பரவும் அனர்த்த நிலை இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி 2 நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகியிருந்தனர். இதன் பின்னர் இரண்டு வாரங்களில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர். 4 வார காலத்துக்குள் யாழ்ப்பணத்தில் 4 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இலங்கை ஒரு சிறிய நாடு இவ்வாறான நாட்டில் ஒரு பிரதேசத்தில் நோய் அனர்த்த நிலை இருப்பது என்பது அது நாட்டிற்கே அனர்த்த நிலையாகும்.

இதுதொடர்பில் நாம் மகிழ்சியடைய முடியாது. அதாவது ஒரு பகுதியில் மாத்திரம் இந்த அனர்த்தம் இருப்பதாக கருத முடியாது. இந்த அனர்த்த நிலையில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுப்பதற்காக மலேரியா ஒழிப்பு குழு, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மாகாண வைத்தியசாலை பணிப்பாளர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

## நோர்வே தமிழ்த் திரைப்பட விழா; 'புத்தி கெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படத்திற்கு 4 விருதுகள்




**யாழ்.விசேட நிருபர்**

நோர்வே தமிழ்த் திரைப்பட விழா – தமிழர் விருது 2022 இல், “புத்தி கெட்ட மனிதர் எல்லாம்” திரைப்படத்துக்கு நான்கு விருதுகள் கிடைத்துள்ளன.

சிவராஜ் இயக்கத்தில் கடந்த வருட இறுதியில் வெளியான “புத்திகெட்ட மனிதர் எல்லாம்“ திரைப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இந்த திரைப்படத்திற்கு 13 ஆவது நோர்வே தமிழ்த் திரைப்பட விழாவில் 4 விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த நடிகை (சிந்துஜா), சிறந்த ஒளிப்பதிவாளர் (தர்மலிங்கம்), சிறந்த இசையமைப்பாளர் (பூவன் மதீசன்), சிறந்த திரைக்கதை (சிவராஜ்) ஆகிய விருதுகள் கிடைத்துள்ளன.

## கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக அறுவடையில் விளைச்சல் குறைவு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு காலபோக அறுவடையில் கடந்த காலங்களை விட விளைச்சல் குறைவடைந்துள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காலபோக அறுவடையில் ஹெக்டேயர் ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று மெற்றிக் தொன் வரையான விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் மானாவாரி பயிர்செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 69ஆயிரம் ஏக்கர் முதல் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப் பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த காலங்களில் அறுவடைகள் மூலம் கிடைக்கப்பெற்ற உற்பத்திகளை விட இம்முறை குறைந்த அளவு விளைச்சல் கிடைத்துள்ளமையால் பாரிய நஷ்டத்தினை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



போதிய உரவகைகள் இன்மை, களைநாசினிகள் இன்மை காரணமாக சில இடங்களில் விவசாயிகள் தங்களுடைய பயிர் செய்கைகளை கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரசாயன உரங்களை தடைசெய்து சேதனப் பசளை பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்திருந்ததுடன், உரத்தட்டுப்பாடு மற்றும் கிருமிநாசினிகள், களைநாசினிகள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தமையால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடைகள் நிறைவு பெற்று வருவதால் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது கடந்த போகங்களில் ஹெக்டேயர் ஒன்றுக்கு 4.3 மெற்றிக் தொன் முதல் 4.5 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் கிடைத்திருந்தன.

இப் போகத்தில் விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதாவது ஹெக்டேயர் ஒன்றுக்கு 2.5 மெற்றிக் தொன் முதல் 3 மெற்றிக் தொன் வரையான விளைச்சல் மாத்திரமே கிடைத்துள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துப் போராட்டம்



**யாழ். விசேட நிருபர்**

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் சமயத் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள், கத்தோலிக்க திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம், தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, யாழ் மாவட்ட ஜமையத்துல் உலமா தலைவர் அப்துல் அஸீஸ் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

## வடக்கில் ஊடகவியலாளர்கள் அனுபவித்த துன்பத்தை யாரும் மறந்துவிடமுடியாது

### கலாநிதி சுரேன் ராகவன் எம்.பி

**கோப்பாய் குறூப் நிருபர்**



வடக்கில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர் அனுபவித்த துன்பம் வேதனையை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது என வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகத்துறை அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு வருகை தந்திருக்கும் ஊடகவியலாளர்கள் கறுப்பு பட்டி அணிந்து வந்திருக்கிறார்கள். இது ஒரு ஜனநாயகத்தின் வெளிப்பாடு.

நாம் ஒரே குடையின் கீழ் வாழ்கின்ற நிலையில் கருத்துக்களில் வேறுபாடு இருக்கலாம்.

ஆனாலும் நாட்டில் வாழுகின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் உரிமைகள் இந்த நாட்டிலே உறுதி செய்யப்பட வேண்டும்.

ஈராக் மீது அணு ஆயுதம் இருப்பதாக அமெரிக்கா போர் தொடுத்ததை எல்லோரும் அறிவீர்கள்.

உண்மையில் அங்கு என்ன இடம்பெற்றது? ஈராக்கில் அணு ஆயுதம் இருப்பதாக அமெரிக்கா சந்தேக செய்தியை வெளியிட்டு அதை உண்மையாக்கும் விதமாக போர் தொடுத்தது.

ஊடகம் ஜனநாயகத்தின் தூணாக கருதப்படுகின்ற நிலையில் தகவல்களை உறுதி செய்து வழங்க வேண்டும்.

ஆகவே வடக்கு ஊடகவியலாளர்களை தொழில்நுட்ப ரீதியாகவும் வாழ்வாதார நீதியாகவும் முன்னேற்றுவதற்கு என்னால் இயன்ற பங்களிப்பை செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



வேலணையூர் ரஜிந்தன் எழுதிய "பேரன்பின் படிமங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் உதயவாசலில் நடைபெற்றது.

## முன்பள்ளி ஆசிரியர்கள் முல்லைத்தீவில் கவனயீர்ப்புப் போராட்டம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கான அடிப்படை சம்பளத்தினை அதிகரிக்க கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டதுடன் மனுஒன்றினையும் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடிய முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கான சம்பள உயர்வினை கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மனு ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலான காலம் சேவை நோக்கில் கற்பித்தல் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பலதடவைகள் கொடுப்பனவு தொடர்பான வேண்டுதல்களால் வட மாகாண சபை முதற்கட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக நான்காயிரம் ரூபாவாகவும் தற்போது ஆறாயிரம் ரூபாவாகவும் வழங்கிவருகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் பெண் தலைமைத்துவம் கொண்டவர்களாகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் உள்ளனர். இன்றைய காலகட்டத்தில் இக்கொடுப்பனவு எமது வாழ்க்கைக்கு போதுமானதாக இல்லை. எனவே எமது நிலைமையினை கருத்திற்கொண்டு சம்பள உயர்வினையும் நிரந்தர நியமனத்தினையும் வழங்குவதற்கு ஆவனம் செய்யுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# சொல்லால் வரைந்த ஓவியம்

## குறிஞ்சித் திணைப் பாடல்களில் சொட்டும் இலக்கிய நயம்



"பல பிறவியிலும் என்னோடு தொடர்ந்து வரும் அன்பினை உடையவள் என் காதலி. அவள் மயில் போன்ற சாயலினை உடையவள். நெருங்கிய அழகிய பல்வரிசை உடையவள். அவளது கூந்தலைப் போல நறுமணம் உடைய பூவை நீ அறிந்ததுண்டோ ?"

குறிஞ்சித் திணைப் பாடல்களில் காணப்படும் இலக்கிய நயங்களாகிய கற்பனை, சொல்லாட்சி, உவமை, உள்ளுறை ஆகியவை கற்பனை நயத்தை மேலும் மெருகூட்டுகின்றன.

குறிஞ்சிப்பாட்டில் தலைவியும், தோழியும் அருவி நீராடியதைச் சொல்லும் போது கற்பனை நயத்தைச் சுவைக்க முடிகிறது. கடல் குறைய நீரை மொண்டு கொண்டு வானில் கூடின மேகங்கள்; காற்று வீசியது; மேகங்கள் கலங்கின. முரசம் போன்று இடியை முழங்கின. பறவைகள் தம் கூடுகளில் போய் அடங்கின. முருகப் பெருமானின் வேல் போல் மின்னல் தோன்றியது.

இத் தொகுதிகளுடன் தலைவனின் மலைமேல் மழை பொழிந்தது. நெடிய மலை உச்சியிலிருந்து வெண்மையான அருவி கொட்டியது. தெளிந்த நீரையுடைய அருவி தூய வெள்ளை ஆடை போல் இருந்தது. பளிங்கைக் கரைத்து வைத்தது போன்று சுனை பரவி இதமளித்தது. (குறிஞ்சிப்பாட்டு: 46 57)

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவியின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்று நினைக்கிறான் தலைவன். நாணம் உடைய அவளை நாணத்திலிருந்து நீக்க அவள் உடல்தொட்டுக் கூந்தலைத் தடவுகிறான். இதனை மெய் தொட்டுப் பயிறல் என்பர். கற்பனை சிறக்க வண்டை அழைத்துப் பேசுகிறான்.

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ யறியும் பூவே
(குறுந்தொகை – 2)

"அழகிய சிறகுகளை உடைய வண்டே ! நீ மலர்களில் உள்ள பூந் துகளை ஆராய்ந்து உண்கின்றாய். என் வினாவிற்கு விடை தருவாயாக. எனக்காக நான் விரும்பியதை நீ சொல்ல வேண்டாம். பல பிறவியிலும் என்னோடு தொடர்ந்து வரும் அன்பினை உடையவள் என் காதலி. அவள் மயில் போன்ற சாயலினை உடையவள். நெருங்கிய அழகிய பல்வரிசை உடையவள். அவளது கூந்தலைப் போல நறுமணம் உடைய பூவை நீ அறிந்ததுண்டோ ?"வண்டை அழைத்து அதன் வாழ்க்கை முறை காட்டித் தன் கருத்தை நிலை நிறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது. இங்கு ஒரு நாடகமே நடக்கிறது.

வண்டோடு பேசும் பேச்சு தலைவியின் அழகைப் பாராட்டும் பேச்சு; தலைவி அதைக் கேட்டுப் புன்முறுவல் பூப்பது தெரிகிறது;

கூந்தலில் மொய்க்கும் வண்டை விலக்குவது போன்ற ஒரு பாவனையில் தலைவன் தலைவியின் கூந்தலைத் தீண்டுவது புலப்படுகிறது.

காதலின் அகல, உயர, ஆழ அளவுகளைக் கூறிப் பாடப்பட்ட குறுந்தொகைப் பாடல் சொல்லாட்சிக்குச் சிறந்த சான்றாகும். தலைவனோடு தான் கொண்ட நட்பின் தன்மையைத் தலைவி தோழிக்கு எடுத்துரைக்கிறாள்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந் தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங் கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
(குறுந்தொகை – 3)

கரிய கொம்புகளில் பூத்துள்ளன குறிஞ்சி மலர்கள். அவற்றிலிருந்து வண்டுகள் தேனைச் சேர்த்துத் தேன்கூடுகளைக் கட்டுகின்றன.

இத்தகு இனிமை நிறைந்த மலை நாட்டினன் என் தலைவன். அவனிடம் நான் கொண்ட நட்பானது நிலத்தை விட அகலமானது; வானத்தை விட உயர்ந்தது; கடலைவிட ஆழமானது.

குறிஞ்சி மலரில் உள்ள தேனை மலை உச்சியில் தேன் கூட்டில் சேர்க்கின்றது தேனீ என்னும் வண்டு. அதுபோல் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த எங்கள் உள்ளங்கள் இனிமையாய் ஒன்றுபட்டன.

பால்வரை தெய்வம் என்ற விதி எங்கள் இருவரையும் இணைத்துள்ளது,' என்பன போன்ற பல கருத்துக்களை உள்ளடக்கியது இப்பாடல். இது தோழியிடம் தலைவி கூறுவது. 'கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்' என்பது சொல்லால் வரைந்த ஓவியம் ஆகிறது.

முனைவர் இளங்கோவன்...

---

கலைக் கதம்பம்

சைத்திரியன்

## விருந்து படைக்கும் கொழுந்து



அமேசன் காட்டு அருமருந்து
அறிமுகமானது வெள்ளையர்களால்
இன்று எமக்கு அது
விருந்து படைக்கும் கொழுந்து

மலைமுகடுகளில் வளர்ந்து
மனங்குளிரவைக்கும் சாயம்
இன சனங்களை உபசரிக்க
இனிய தேனீர் பானம்

அதிகாலை எமை எழுப்பி
அருமையாக வழங்கப்படும்
உற்சாக பானம்
சூடாக அருந்தும் சுவையான பானம்

இஞ்சி கலந்து பால் கலந்து
இன்சுவை தரவல்ல இசைவான
நட்புப் பானமாகிப் போச்சு
பிரித்தானியர் வகுத்துத் தந்த
தேயிலை இப்போ தேடிவரும் வருமானம்
பச்சையென்றும் பழுப்பு என்றும்
பலவகையில் தேயிலை

மலை நாட்டு மக்கள்
அட்டைவிரட்டி அழகுறக் கொய்து
வியர்வை சிந்திய உப்பால் தானோ
உரிய சுவை அதற்குண்டு.

பிளேன்டீ என்றும் டீ என்றும்
கசட்டையென்றும் முதன்மை தரும்
உற்றார் உறவினரை உபசரிக்க
சோம்பல் களைந்து சுறுசுறுப்பாக்க
உறவாக இணைந்த பானம்

தேநீர் என்ற தெவிட்டா பானம்
நிரம்பி வழிய ஒரு கோப்பை
அருந்தித்தான் பார்ப்போமா?

கந்தளாய் முஸ்தபா சகாப்தீன்

---

## அம்பாறை தமிழ் எழுத்தாளர் பேரவை மாவட்டம் தழுவிய இலக்கிய நிகழ்வு

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை சர்வதேச மகளிர் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் எதிர்வரும் மார்ச் 8ம் திகதி மாவட்டம் தழுவிய இலக்கிய நிகழ்வு ஒன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளது.

நிகழ்வில் இவ்வருடத்துக்கான பெறுமதி வாய்ந்த ஆவணமாக 'சிறப்புக் கவிதை தொகுப்பு நூல்' ஒன்றினை வெளியிடவுள்ளதுடன்

அதற்கிணங்க 16 வரிகள் கொண்ட கவிதையை எதிர்வரும் பெப்ரவரி 15ற்கு முன்னர் 'தேச பந்து ஜலீல் ஜீ சம்மாந்துறை' எனும் விலாசத்துக்கோ அல்லது 076 355 2423 எனும் 'வாட்ஸ்அப்' இலக்கத்துக்கோ அனுப்பி வைக்கலாம்.

கவிஞர்களுடைய புகைப்படத்துடன் அக்கவிதை நூலுருப் பெறவுள்ளதுடன் விழாவின் போது அக் கவிதையை தாங்களே வாசித்து காண்பிப்பதற்கும் சந்தர்ப்பம் மேடையில் வழங்கப்படவிருக்கிறது.

கவிதை எழுதிய அனைவருக்கும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படவுள்ளதுடன் விருது வழங்கி கௌரவிக்கவுமுள்ளது.

'விடியல் தேடும் விட்டில்கள்'

'அர்ப்பணிப்பில் உயர்ந்த ஆயிழை'

'ஆணுக்குப் பெண் நாங்கள் அடிமையல்லோம்.'

'மாதர்களை இழிவு செய்யும் மதியினர் ஒழிகவே! ' தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் கவிதை வடிக்கலாம் என பேரவையின் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா தெரிவித்தார்.

✦✦✦

## நிகழ்த்துக் கலை

### அரங்க செயற்பாட்டாளர் ரஜீவவின் கதையாடல் தொடர்பான பார்வை

அரங்க செயற்பாட்டாளர் செ.ரஜீவவின் காமன் கூத்து தொடர்பான கதையாடலொன்று அன்னையின் சூம் தொழில்நுட்பம் மூலமாக நடைபெற்றது.

புத்தாக்க அரங்க இயக்கம் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

கடலுக்கப்பால் எல்லை தாண்டிய தான ஒரு தனித்த சமுகத்தின் வாழ்க்கையின் அழகியல் சார்ந்த உயிர் வாசத்தை கேட்கக்கூடிய சில நிமிட கதையாடல்,

உலக மயமாக்களின் பின்விளைவான இன தனித்துவ அழிப்பு முறைக்குள்ளும் உயிர்துடிப்பு மிக்க மலையக சடங்கு சம்பிரதாயம் கொண்ட நிகழ்த்துகலையின் ஆழமான பூர்வீக உணர்வுமுறையினை இருநூறு ஆண்டுகளாய் கடந்து நீண்டிருக்கும் சமுதாய அடையாளத்தை, அதன் பரிசுத்மான ஆத்மார்த்த நிகழ்முறைகளை,அதன் கண்ணியங்களை விளக்கமாக முன் வைத்தார் அரங்க செயற்பாட்டாளர். மக்கள் தம் உளப் பதிவுகளை சடங்குஅம்சத்தினுள் பதித்து , தனது குல தெய்வத்தை தலைமுறை பண்பாட்டு வாழ்வை, உலக உச்சிக்கு நகர்த்திய செல்நெறியின் தார்மீகத்தை உரக்கச்சொன்ன பாங்கும் முன்வைத்த ஆதார சொல்லாடல்களும் ;

முதுசமான இந்த கலை பாரம்பரியத்தை பாதுகாத்திடல் வேண்டும் என தூண்டியதை உணரமுடிந்து.

இந்த கதையாடலுக்கு களமமைத்து கொடுத்த புத்தாக்க அரங்க இயக்கத்திற்கு பாராட்டுக்கள்.

தகவல் :
பொன். ராஜகோபால்

---

## "விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் படைப்பாளனுக்கு அவசியம்"


### குரு சதாசிவத்தின் 'வடக்கு வீதியிலே' நூல் ஆய்வரங்கில் விமர்சகர் மு.தயாளன்



குரு சதாசிவத்தின் வடக்கு வீதியிலே நூல் மீதான ஆய்வரங்கு சூம் தொழில்நுட்பம் மூலமாக அண்மையில் நடைபெற்றது.

அந்த ஆய்வரங்கில் வடக்கு வீதி நூலில் இருந்து நான்கு கதைகளை எடுத்துக்கொண்டு அதற்கான விமர்சனத்தை சிறுகதை மஞ்சரி ஆசிரியரான மு.தயாளன் நிகழ்த்தினார்.

விமர்சனங்கள் படைப்பாளிக்கான புகழ் பாடல்களாக இல்லாமல் சமநிலையில் மேற்கொள்ளப்பட வேண்டியது என்பதை அவர் சிறப்பாக விளக்கியிருந்தார்.



அதன் ஒரு பகுதி தினகரன் வாசகர்களுக்காக.

" விமர்சனம் என்று வரும்போது இரண்டு பக்கங்களும் சமநிலையில் ஆராயப்பட வேண்டியது அவசியம். அவ்வாறு அமைந்தால் தான் அது குறித்த எழுத்தாளருக்கு பிரயோசனமாய் அமையும் என்பது எனது கருத்து.

ஒருவர் எப்போது எழுதத் தொடங்குகிறாரோ அப்போதே விமர்சனங்களை தாங்கக் கூடிய சக்தியும் அவருக்கு இருக்க வேண்டும். அவ்வாறு விமர்சனத்தை தாங்க முடியாத ஒரு எழுத்தாளராக அவர் இருப்பாரானால் அன்றிலிருந்து தனது பேனாவை தூக்கி எறிந்து விட்டு அவர் வேறு வேலைகளை பார்க்க முடியும்.

எனக்கு ஒரு அனுபவம் உள்ளது.நான் ஆரம்பத்தில் புளியமரம் என்ற ஒரு சிறுகதை தொகுப்பை வெளியிட்டிருந்தேன்.

அதை நான் பிறந்த ஊரான கரவெட்டியில் வெளியிட வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. அந்த வெளியீட்டு நிகழ்வில் நண்பர் ஒருவர் அந்த நூல் மீதான விமர்சனத்தை மேற்கொண்டார். அந்த நண்பரின் பெயர் ராகவன். அவரும் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர். அவர் அந்த மேடையிலேயே வைத்து இது ஒரு சிறுகதைத் தொகுப்பே அல்ல என்று கூறி விட்டார்.

மிகத் துணிவான விமர்சனங்களை மேற்கொண்ட அவர் அதற்கான காரணங்களையும் எடுத்துக்கூற தவறவில்லை. அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன்.

அதன் பிறகுதான் நான் எழுத்துக்களை திருத்தமாக எழுதவும் சிறப்பாக எழுத வேண்டும் என்ற எண்ணமும் வந்தது. ஆகவே விமர்சனம் என்பது இரண்டு பக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்த சிறுகதை நூலிலிருந்து எனக்கு நான்கு கதைகள் விமர்சனத்திற்காக தரப்பட்டுள்ளன. அதில் வடக்கு வீதியிலே சிறுகதையும் ஒன்று. நிஜத்தின் நிழல் மற்றும் வடக்கு வீதியிலே புதிதாக இந்த தொகுப்பில் பார்த்து கொண்டவை. நான் தொழில் ரீதியில் ஒரு கணக்கு ஆசிரியன் என்ற வகையில் முதலில் நான் இந்த சிறுகதைகளை நிரல் படுத்தினேன்.எனது வாசிப்பைக் கொண்டு எது முதலாவது,எது இரண்டாவது,எது மூன்றாவது,எது நான்காவது என்று வகுத்துக் கொண்டேன்.

நான் முதலாவதாக அதிகம் மார்க்குகளை வழங்கியது நிஜத்தின் நிழல் என்ற சிறுகதைக்கு.

இரண்டாவது அதிக மார்க்குகள் தெய்வமும் மனிதனாகலாம் என்ற சிறுகதைக்கு. மூன்றாவதாக பச்சை விளக்கு,நான்காவதாகத்தான் வடக்கு வீதியிலே.கதைகளுடைய அமைப்பு, கதை சொல்லப்பட்ட விதம் எனது கவனத்திற்கு உடபடுத்தப்பட்டவை. சிறுகதை என்ற சொல் ஆங்கிலத்திலிருந்து வந்த சோட் ஸ்டோரி என்ற மொழியாக்க சொல்தான். முன் காலத்திலேயே நீதிக்கதைகள் இருந்துள்ளன அறநெறி கதைகள் இருந்துள்ளன. சிறுகதை இருக்கவில்லை.

சிறுகதை என்பது சிறிய கதை என்பதும் அல்ல. அது அதற்கென்றே ஒரு வடிவத்தை, ஒரு அழகை கொண்டுள்ளது என்பதுதான் உண்மை. அந்த வகையில் அந்த இலக்கணம் ஒரு நிலையானதும் அல்ல. இலக்கியத்தினுடைய எந்த வடிவமும் நிலையான ஒரு வடிவம் அல்ல. கால மாற்றத்தோடு அதனுடைய வடிவங்கள் மாறுபடுகின்றன. சிறுகதைகளும் அப்படித்தான்.

புதுமைப்பித்தன் காலத்திலிருந்து சுஜாதா வரைக்கும் ஏன் இன்றைக்கு எமது ஈழத்து எழுத்தாளர்களும் சிறுகதைகளில் பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

(மிகுதி அடுத்த வாரம்)

தொகுப்பு:
லோரன்ஸ் செல்வநாயகம்...









வரலாற்று சிறப்புமிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா (17) நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள். (மாத்தளை சுழற்சி, உக்குவளை, நாவலப்பிட்டி சுழற்ச்சி நிருபர்கள்)

# பசும்பால் உற்பத்தியை மேம்படுத்த ஆளணி பற்றாக்குறை தடையாகவுள்ளது

## விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு




**ஹற்றன் விசேட நிருபர்**

நுவரெலியா மாவட்டத்தில் பசும்பால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு ஆளணி பற்றாக்குறை தடையாகவிருப்பதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் குமுதினி ராஜநாயக்க, தெரிவித்தார்.

மத்திய மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொகவந்தலாவ தோட்ட விளையாட்டு கழக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (17) மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், ஹற்றன் பொகவந்தலாவ, அக்கரபத்தனை உள்ளிட்ட பல பிரதேசங்களில் பசும்பால் உற்பத்தியில் ஈடுபடும் பலர் உள்ளனர். நாட்டில் பசும்பால் உற்பத்திக்கு தேவையான வளங்கள் நிறைந்த மிகப்பொருத்தமான மாவட்டமாக நுவரெலியா மாவட்டம் காணப்படுகின்றது. இதனால் இத்துறையினை மேம்படுத்துவதற்காக கடந்த 2021 ஆண்டு மாகாண அமைச்சின் ஊடாக 6.9 மில்லியன் ரூபாய்களும் திணைக்களத்திலிருந்து 7.9 மில்லியன் ரூபாய்களும் கிடைக்கப்பெற்றன. 05 பசுக்களுக்கு மேல் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் புற்தரிக்கும் இயந்திரம் ஒன்றினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். அதற்கமைய இதுவரை நாங்கள் 91 புற்தரிக்கும் இயந்திரங்களை பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஆனால் எம்மிடம் உள்ள கரவைப் பசுக்களில் 20 தொடக்கம் 25 லீற்றர் பால் கரக்கக்கூடிய பசுக்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் இருந்து சுமார் 8 தொடக்கம் 10 லீற்றர் பால் வரையே கரக்கப்படுகின்றன. அவற்றுக்கு தேவையான போதுமான போசனையுடைய உணவு வழங்கப்படுவதில்லை.

பால் உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு புற்களை அறுத்து கொண்டு கொடுத்த போதிலும் அவற்றை அவை விரும்பி உண்பதற்கு ஏற்ற வகையில் கொடுக்காமையால் இந்நிலை உருவாகியுள்ளன. பால் பண்ணையாளர்களை தெளிவுபடுத்துவதற்கோ அல்லது அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொடுப்பதற்கோ எம்மிடம் தேவையான அளவு மிருக வைத்தியர்களோ அல்லது அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்களோ இல்லை. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம் ரமேஸ்வரன் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே.ரவி, கால்நடை வைத்தியர்களான பி.எம் விக்கிரமநாயக்க, ஜே,தவராஜா, சுரேஸ்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பொகவந்தலாவ, மஸ்கெலியா, அக்கரபத்தனை உள்ளிட்ட பிரதேசங்களில் பால் உற்பத்தியில் ஈடுபடும் பாற்பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக புற்தரிக்கும் இயந்திரம் ,பால் கரக்கும் இயந்திரம்,குளிரூட்டிகள், தள்ளுவண்டி, மண்வெட்டி, உள்ளிட்ட சுமார் 20 லட்சம் பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# சரக்கு ரயில் தடம்புரண்டதில் மலையக போக்குவரத்து சேவைகள் பாதிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்**



கண்டியிலிருந்து பதுளை நோக்கி புறப்பட்ட சரக்கு ரயில் வட்டவளை ரொசல்லை பகுதியில் தடம்புரண்டதில் மலையகத்திற்கான புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று (18) அதிகாலை கண்டியிருந்து பதுளை நோக்கி புறப்பட்ட ரயில் ரொசல்லை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் காலை 7.00 மணியளவில் தடம்புரண்டுள்ளது.

இதனால் புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ரயிலில் பதுளை நோக்கி பயணித்த பயணிகளும் சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர். ரயில் தடம் புரண்டதன் காரணமாக சமிக்ஞை கட்டுப்பாட்டு தொகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. ரயில் தண்டவாளங்களை திருத்துவதற்காக நாவலப்பிட்டியிலிருந்து திருத்து குழுவினர் வருகை தரவுள்ளதாகவும் மிக விரைவில் ரயில் பயணங்கள் வழமைக்கு திரும்பவுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தின் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக தேர்த்திருவிழா

## மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் பங்கேற்பு

**உக்குவளை விசேட நிருபர்**

கொவிட் 19 சுகாதார விதிமுறைகளுக்கமைய மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு ஆலயத்தைவிட்டு வெளியேறி நேற்று அதிகாலை சுமார் 4.30 மணியளவில் ஆலயத்தை சென்றடைந்தது.

தேர்திருவிழாவில் பஞ்சரத பவணியில் விநாயகர், முருகப்பெருமான், சிவனம்பாள், அம்பாள், சண்டேஸ்வரி ஆகிய தேர்கள் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு மீண்டும் 4.30 மணியளவில் ஆலயத்தை சென்றடைந்தது. மாத்தளை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரைக்கமைய பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததோடு மாத்தளை மாநகர சுகாதார பரிசோதகர் வைத்தியர் ரிஸ்வானின் நேரடிக் கண்காணிப்பில் சுகாதாரபணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 700 பக்தர்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். கொரோனா தடுப்பூசி மூன்றையும் பெற்றுக்கொண்ட அதற்கான ஆதாரங்களை தன்னகத்தே வைத்துக்கொண்ட பக்தர்கள் மாத்திரமே பஞ்சரத தேர் பவனியில் கலந்துகொள்ள மாநகர சுகாதார பரிசோதகர் அனுமதி வழங்கியிருந்தார்.

மாத்தளை திருகோணமலை வீதி மற்றும் ராஜ வீதிகளில் பூஜைகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்வை இலகுப்படுத்த பற்றைக்காடுகளுக்கு தீ வைப்பு

## மௌன்ஜீன் தோட்டத்தில் சம்பவம்

**(கினிகத்தேனை தினகரன் நிருபர்)**

வட்டவளை மௌன்ஜீன் தோட்டத்தில் மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளும் பகுதியின் அருகிலுள்ள பற்றைக் காட்டுக்கு இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயினால் சில பகுதிகள் எரிந்து நாசமடைந்துள்ளன.

இப்பகுதியில் அண்மைக் காலமாக தீ வைக்கும் சம்பவம் அதிகரித்துள்ளது. அவ்வாறு வைக்கப்பட்ட தீயினால் சுமார் ஐந்து ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி எரிந்து நாசமடைந்துள்ளது. அப்பகுதியில் தற்போது தேசிய மாணிக்கக்கல் திணைக்களத்தினூடாக அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



தேசிய மாணிக்கக்கல் திணைக்களத்தின் தற்காலிக நிர்வாக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான மின் இணைப்பு கூட தீ பரவும் பகுதியிலிருந்தே செல்வதையும் அவதானிக்க கூடியதாகவிருந்தது. தீ பரவலால் அப்பகுதியில் காணப்படும் மின் கம்பங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் வைக்கப்பட்ட தீயினால் பற்றைக் காட்டில் வாழும் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கவலைத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மலையகத்தில் வரட்சியான காலநிலை நிலவுவதால் இவ்வாறான தீ வைப்பு சம்பவங்களால் காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 25வீத பெரிய வெங்காயத் தேவையை பூர்த்தி செய்ய தம்புள்ளை விவசாயிகள் தயார்

**அக்குறணை குறூப் நிருபர்**

தம்புள்ளை பிரதேச விவசாயிகள் நாட்டின் மொத்த பெரிய வெங்காயத் தேவையின் 25 சதவீதத்தை அறுவடை செய்ய தயாராகி வருவதாக தம்புள்ளை பிரதேச கமகல சேவைகள் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கலேவல, தேவஹுவ, சீகிரிய போன்ற பிரதேசங்களில் மொத்தம் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக மொத்தம் 60000 மெற்றிக் தொன் அறுவடையை எதிர்பார்ப்பதாகவும் அது நாட்டின் மொத்த வருடாந்தத் தேவையின் 25 சதவீதம் எனவும் பிரதி விவசாய ஆணையாளர் திணைக்களம் தெரிவித்தது. இதில் சுமார் 5000 விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. எனவே அடுத்த பெரும்போக அறுவடையை அடுத்து உள்ளூர் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் அளவை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உள்ளூர் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# வீதியை விட்டு விலகி வான் விபத்து; மூவர் படுகாயம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



ஹற்றன் அவிசாவளை வீதியில் கினிகத்தேன ரஞ்சுலாவ பகுதியில் நேற்று முன்தினம் (17) இரவு இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். வான் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. வான் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த மூவரும் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் கால் மற்றும் கை எலும்பு முறிந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. கராப்பிட்டியவிலிருந்து தலவாக்கலை நகருக்கு வந்த வான் மீண்டும் தலவாக்கலையிலிருந்து கராப்பிட்டியவுக்கு திரும்பி சென்றுக்கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. வானின் சாரதி கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்கான காரணம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

## உழவன்



உலகம் கண்டுகொள்ளாத
உத்தமன்
உலகத்தார் பசி தீர்க்கும்
வள்ளல்
ஏழ்மையை தன்
உடைமையாய்
விரும்பி ஏற்ற மகான்
காடு கடம்பை கானகத்தை
கரங்கள் காய்க்க
கழனியாக்கி
நீர் செல்லா
காய்ந்த நிலத்தை
கால்வாய் அமைத்து
நிலத்தாகம் தீர்த்து
செழுமையாக்கி
போகம் ரெண்டு
செந்நெல் விதைத்து
பாசத்தோடு நித்தம்
சென்று உறவாடி
பசி போக்கி
பிணி தீர்த்து வளர்த்திட்ட
பயிர்களை
விளைச்சல் கனவுடன்
அறுவடை செய்தபோது
பாற்கஞ்சி சிறுகதை
நிஜமாகியது.
பார் போற்ற வேண்டியவன்
பரதேசி போன்று
பார்ப்பவரின்றி
பதறாகிறான்
சமூகத்தில்
கடன்காரன் எனவும்
ஏழை எனவும் முத்திரை
பொறிக்கப்பட்டு
நடமாடும் வரை
மண்வெட்டி துணையாய்

கூன் விழுந்து
படுக்கையில் கிடக்கையில்
தடியுடன் நடப்பிணமாய்.
சேவைக்கோ எதுவித
பென்சனுமின்றி
அன்னமளந்தவன்
அன்னத்திற்காய் படும்பாடு
பார்க்காதவருக்கு
எப்படி புரியும்
அரசே!
விவசாயினையும் கொஞ்சம்
சீர் தூக்கிப் பார்
ஓய்வின் போது.

தோப்பூர்

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர் குறூப் நிருபர்

## என் மண நாள்



மனசுக்கு ஏத்த பொண்ணு
மண முடிக்கப் போறேன் இன்று
எங்களை வாழ்த்துச் சொல்லி
வலி அனுப்பி வை
காதலர் தினமே.

கூரைப் புடவையில்..
காதல் கவிதை எழுதினால்
படித்துப் பார்க்க முன்
பக்கத்துல அமர்ந்தால்

தாலியைக் கட்டுவதாக.?
அவளைக் கட்டுவதா? இல்லை
நிலாவுக்கு வர்ணம் தீட்டிய
தங்கைக்கு நன்றி சொல்லுவதா

மனம் போல வாழ்க்கை
மன்றத்தில் எங்களை வாழ்த்தி
காதலர் தினம் வந்து
கையெழுத்து இடுகிறது

நான் தேடிய உலகம்
கை பிடித்த நேரம்
வலிமை வந்து.
கதவை தட்டினாலும்
பொறுமை எங்களை
கைவிட வில்லை

மூச்சுக்கு முன்னூறு தடவை
என் பெயரை மட்டும்
உச்சரிப்பால் காரணம்
அவளின் முதல் குழந்தை
நான் என்பதால்

அன்பு மிகுந்து
அக்கறை காட்டுவதில்
பாருலகமே வியந்து போகும்
என் மனைவி பஹிமாவே
உதாரணம் போதும்!

டி. எல். நஸீம்
கிண்ணியா 01

## உச்சம் தொட்ட ஒலிபரப்பாளர்



அல்ஹுமைஸரா ஈந்த
அரும் புலமைச் சொத்து
அகத்தில் துயர் நிறைத்து
விழிநீரை வழிய விட்டு
அவனியைப் பிரிந்தது !

1980.....
கல்விப் புரவலர்
ஹாஜி நளீமவர்கள்,
உயர் கல்வி விருத்திக்காக
உரமூட்டிய காலம்....!
எம்மே முஹம்மத் அதிபராக
கல்வியில் ஹுமைஸரா
ஜொலித்த கோலம்,
ஈர்த்தது எண் திக்கும் !
இரை தேடும் புள்ளினமாய்
மாணாக்கர்
விரைந்தனர்...! விளைந்தனர்...!
அல்ஹுமைஸரா அறுவடையின்
பதச் சோற்றுப் பருக்கை
ஃபெரோஸ் !

அமைதியின் திருவடிவம் !
எளிமையின் இலக்கணம் !
செருக்கைச் சினந்திடும்
சீர் கொண்ட சித்தம் !
நெஞ்சுரம் மிக்க
நேர் மறை உழைப்பு !
ஃபெரோஸ்
சந்தடி இன்றியே
சாதித்தவை பல !

எஃப். எம். நாதம்
செவிக்குள்ளே.....
கொந்தளிக்கும் கடலாக
எகிறிக் குதிக்கும் காலமிது !
இலங்கை வானொலி
தமிழ்ச் சேவை
செவிப்பறையை.....
இதமாய்த் தழுவிய காலமது !
ஃபெரோஸின் செந்தமிழ்ச் செய்தி
வானலையில் தவழ்ந்தபோது....
மெய்ம் மறந்தோம் !
உள்ளம் புல்லரித்தோம் !

அரும் புலமை.......
அரிய பண்புகள்......
அப்பழுக்கற்ற திறமை....
இடையறா முயற்சி........
இட்டுச் சென்றன அவரை
ஒலிபரப்பின் உச்சத்துக்கு !
நச்சரிப்பு அல்ல... !
உச்சரிப்புத் தேவை
சுய பாஷையில் மட்டுமல்ல,
மறு பாஷையிலும்தான் !
அவர்தம்
தரம் மிக்க ஒலிபரப்பின்
தகைச் சான்றிதழ் இது !

வேர்விலை மண்ணில்
வேர் விட்ட வித்து !
சுயமாகக் கற்று.....
தகைமை வளர்த்து.....

வானலையில் வந்து....
மக்கள் பணி புரிந்து......
விளம்பரம் துறந்து......
சாமான்யர் உள்ளத்தே
முத்தாய் விளைந்து
விடைபெற்றுச் சென்றது
எம்மைப் பிரிந்து.

தலைவனின் பிரிவால்
தவிக்கிறது குடும்பம் !
ஏங்கும் இதயங்களுக்கு
தாங்கும் சக்தி தா அல்லாஹ் !
சனூஸ் எம். ஃபெரோஸின்
மண்ணறையில்
சுவனத்தின் சுகந்தத்தை
திறந்தருள்வாய் யா அல்லாஹ் !

முஹம்மத் மிஃப்ராஹ்

## கனவுக் காதலன்



அந்தி மாலை
நேரம்,
வந்து போன
நினைவுகளும் நானும்.

கண்ணீரில் கரைந்து
போன ஞாபகங்கள்
என்னுல் பல
விதமான வலிகளுடன்
பிறக்கின்றது இன்று.

கற்பனையான காதல்
என்று கல்றையில்
மறைந்து போன
காதலன் என்பதால்

புலம்பி தவிக்கிறேன்
இன்றுவரை.

அவள் எனக்கு
தந்து போன
வலிகளால் விழிகள்
கவிகள் எழுத
ஆரம்பிக்கின்றது கண்ணர்த்
துளிகள் என்று.

இருந்தும் தனிமையுடன்
இனிமையான நினைவுகளை
சுமந்தபடி கிடக்கின்றது
உணர்விழந்த இந்த
இதயம்.

பொத்துவில் அஜ்மல்கான்

## விடியல் பூக்கட்டும்



பயிர்செய்கைக்கொவ்வாத
கட்டாந்தரை பிளந்து
உள்ளே விழுந்து
உயிர் பூண்டு
வேரூன்றி கிளர்ந்தெழக் கூடிய
அற்புத வித்து நீ

உனக்குள்
உறங்கிக் கிடக்கும்
உன் விருட்சத்தை
உணராமல் மாற்றான்
மரத்திலிருந்து உதிர்ந்த
சருகுகளுக்காக
உன்னை தேய்த்துக்
கொள்ளும்போது நீ
யாருக்காகவோ
பாதரட்சையாகிறாய்.

உன்னைச் சிறகாக்கி
உன்னிலும் ஊனப்படவர்களை
உல்லாச பறவையாய்
பறக்க வைக்கும்
வித்தை படி.

துணிச்சல் விளக்குகளின்
துணை கொண்டு
அந்தகாரம் கிழித்து
சூரியனாய் பூத்துவிடு.

பீதிகளை அணிந்துகொண்ட
உன் தைரியங்களை
சலவைக்குப் போடு

மரணத்தின்
வாசல்களை மூடும்
கதவுகள் செய்வதற்கு
சாத்தான்களின் வேதங்களை
தள்ளி வைத்துவிட்டு
மயானங்களின் மத்தியில்
உயிர்வாழ்தலுக்கான
தொழிற்சாலைத் தொடங்கு

வாழத் தெரியா
மானுடத்தின்
வாழ்க்கை நுட்பக் கருவிகளை
பழுது பார்க்கும்
புதியதோர்
இயந்திரம் செய்.

கனவுகளைத் தூக்கித்
தோளில் போட்டுக்கொண்டு
இலட்சியங்கள் எதிர்கொண்ட
உன் காலடியை
நீ உருவாக்கிய
திசையில் எடுத்து வை.

உலகம் அழியப்போகும்
கடைசி கணங்களுக்கு
முன்பாகவேனும்
விழித்துக் கொண்டு
அதை தடுத்து நிறுத்தும்
சக்தி உன்னில் இருந்தும்
உலகை அழிவின் பாதையில்
வழிநடத்தும் உன்
சக்தியின் யுக்தியை
வல்லமைக்குள் இட்டுப்பார்.

எட்டாத தூரத்தில் இருக்கும்
இன்னொரு உலகத்தையும்
இணைத்துக் கொண்டு
அண்ட வெளிகளில்
உல்லாசப் பயணம் போகும்
உன்னால் இந்த பூமிக்கு
மறு விடியல் பூக்கட்டும்

கும்பகர்ணனின்
கூட்டுக் குடும்பத்துக்குள் கிடக்கும்
என் நாளைய சூரியனே
கொஞ்சம் வெளியே வா
எறும்புகளின்
இமயம் நோக்கிய பயணம்
உன் வெற்றிக்கு
வழிகாட்டி நிற்கிறது

மெய்யன் நடராஜ்

## தடுமாறும் பட்டாம் பூச்சிகள்



பூச் செடிகள் வளர்ப்பதற்கு
சாதகமான முற்றம் இல்லை

விருந்தாளிகளை கவரவென
சாலைப் பொதுவில் நிற்கும்
வீட்டு முகப்புச் சுவரில்
பூக்கள் மலர்ந்தபடி
செடிகள் சிலதை
வரைந்து வைத்துள்ளேன்

அது இடைக்கிடை
வீட்டுக்கு வந்து செல்பவர்களை
வியந்து ரசிக்கத் தூண்டுகிறது

இருந்தும் பட்டாம்பூச்சிகள்தான்
பிரிதாபம் மிக்கவை
மலர்ந்திருக்கும் பூக்களில்
தேனருந்த தினமும் பிரசன்னமாகி
ஏமாந்து தடுமாறிச் செல்கின்றன

ஜமீல்

# கிழக்கின் குரல்








கல்முனை மாநகர் ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகி 17 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது. விநாயகப் பெருமான் வீதி உலா வருவதையும் கொடித்தம்பத்திலிருந்து கொடி இறக்கப்படுவதையும் தீர்த்தக்குளத்தில் பக்தர்கள் புனித நீராடுவதையும் படங்களில் காணலாம்.

### இலங்கை ஆசிரியர் சங்கத் தலையீட்டால்

## மட்டு. மத்தி வலய ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

மண்டூர் குறூப் நிருபர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட 1813 ஆசிரியர்களுள் 900 ஆசிரியர்களுக்கு மாத்திரமே அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு, கடந்த ஜனவரி மாதம் வழங்கப்பட்டதென்பது ஏனைய ஆசிரியர்களினால் பெரிதும் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்ட நிலையில் இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மத்தி வலய பிரதிநிதி றிக்னாஸினால், கிழக்கு மாகாண இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் மட்டக்களப்பு மத்தி வலய கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர் N.J றிப்கா, கணக்காளர் S.H நௌபீக் ஆகியோருடன் கடந்த 23 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டதன் பயனாக விசேட சம்பளப் பட்டியல் மூலம் அல்லது பெப்ரவரி மாதத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கூறப்பட்டது.

எனினும் நேற்று முன்தினம் (17) வரையில் மேலதிகமாக 500க்கும் குறைவான ஆசிரியர்களுக்கு மாத்திரமே அதிகரிக்கப்பட்ட சம்பளத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வலய பணிப்பாளர், கல்வி நிருவாக உத்தியோகத்தர் (நிருவாகம்), கணக்காளர் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பில் பலத்த கருத்து மோதல்களுக்கு பின்னர் அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தினை மார்ச் மாத முதல் வாரத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது.

## கிழக்கில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் ஆளுநரினால் திறந்து வைப்பு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



கிழக்கு மாகாணத்திலுள்ள சுய தொழில், கைவினைஞர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களம் பாரிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக, திருகோணமலை மாவட்ட உப்புவெளி சந்தியில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் (17) திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ. வணிகசிங்க, முதலமைச்சின் செயலாளர் (திருமதி) கலாமதி பத்மராஜா, சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வெள்ளிக்கிழமையிலிருந்து புதன்கிழமைக்கு

## தோப்பூர் உப பிரதேச செயலக பொதுமக்கள் தினம் மாற்றம்

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் வழமையாக வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்று வந்த பொதுமக்கள் தினம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் பிரதி புதன்கிழமைகளில் இடம்பெறும் என மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக் அனைத்து பொதுமக்களுக்கும் அறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

குறித்த புதன்கிழமைகளில் பிரதேச செயலாளர் உட்பட கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் வருகை தருவதால் பொதுமக்கள் தங்களுக்குரிய சேவைகளை இத்தினத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் வெள்ளிக்கிழமை பொதுமக்கள் தினமாக இருந்த நிலையில் ஜும்ஆ செல்லும் முகமாக பொதுமக்கள் தங்கள் சேவைகளைப் பெறுவதில் அசௌகரியங்களை எதிர்நோக்கிய நிலையில் தற்போது பொதுமக்கள் தினத்தை புதன்கிழமையாக மாற்றியமைக்கு தோப்பூர் பிரதேச மக்கள் பிரதேச செயலாளருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கன்னன்குடா பிரதேசத்தில் இளைஞன் வீட்டின் அறையில் சடலமாக மீட்பு

மணல்சேனை நிருபர்

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கன்னன்குடா பிரதேசத்தில் 17 வயது இளைஞன் சந்திரகுமார் டிலக்ஷன் என்பவர் தனது வீட்டு அறையில் தனக்குத்தானே தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று அவரின் தாயார் வைத்தியசாலைக்கு சென்று வீடு திரும்பிய போது வீட்டின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அயலவர்களின் உதவியுடன் வீட்டின் கதவினை திறந்து உட்சென்ற போது குறித்த இளைஞன் வீட்டின் அறையினுள் தனக்குத்தானே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்திருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடல் கொந்தழிப்பால் மீனவர்கள் பாதிப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரும்பாலான கடற்பகுதியில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமல் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. தற்போதைய நிலையில் கடல் கொந்தழிப்பு அதிகரித்துக் காணப்படுவதனால் தாம் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தமது தோணிகளை கரையேற்றி வைத்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் களுதாவளை, தேத்தாதீவு, மாங்காடு, செட்டிபாளையம், களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள பல மீனவர்களே இந்நிலைமையை எதிர்கொண்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

## திருக்கோவிலில் 60 பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைப்பு

காரைதீவு குறூப்,திருக்கோவில் தினகரன் நிருபர்கள்

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட காணி ஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் பொது மக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வானது பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமாகிய டபிள்யூ. டி.வீரசிங்க கலந்து சிறப்பித்தார்



இந்நிகழ்வில் 40 பேருக்கு அளிப்பு பத்திரங்களும் 20 பேருக்கு உத்தரவுப் பத்திரங்களுமாக 60 பயனாளிகளுக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் திருக்கோவில் பிரதேச செயலகமானது கடந்த 2020 ஆம் ஆண்டு 800க்கு மேற்பட்ட காணி அளிப்பு பத்திரம் தயாரித்து கிழக்கு மாகாணத்திலே முதலாம் இடத்தினை பெற்றுள்ளமை இதில் மேலும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.இவ் வெற்றி திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியால் கிடைக்க பெற்ற முதலிடமாகும் என்பது குறிப்பிடத்தக்கது

## சமாதானத்திற்கான ஒரு புதுயுகம் படைப்போம்

### மட்டக்களப்பில் இடம்பெற்ற ஒன்றுகூடல்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து சமாதானத்திற்கான ஒரு புதுயுகம் படைப்போம் என்ற உள ஆற்றுப்படுத்தலுக்கான ஒருநாள் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் மட்டக்களப்பு வண்ணாத்திப்பூச்சி சமாதான பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எஸ்.மைக்கல் ஒருங்கிணைப்பில் நிறுவன இயக்குனர் அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத்தின் கிராம மட்ட பல்சமய ஒன்றிய சமாதான குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்க சமூக செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எகெட் நிறுவனம் தற்போதைய சூழ்நிலையில் நல்லிணக்க செயல்பாடுகளுடன் கடந்தகால கசப்பான நினைவுகளை மறந்து சமாதானத்திற்கான ஒரு புதுயுகம் படைப்போம் எனும் உள ஆற்றுப்படுத்தலுக்கான ஒருநாள் ஒன்றுகூடல் நிகழ்வில் வளவாளராக மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி ஜொறோம் டிலீமா மற்றும் சமாதான நல்லிணக்க நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எம்.றொபின்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திண்ம கழிவகற்றலின் போது எடுக்கப்பட்ட பணப்பை கையளிப்பு

சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின் போது 40ஆயிரம் ரூபாய் பணமும், தேசிய அடையாள அட்டை, சராதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் பணப்பை கண்டெடுக்கப்பட்டு உரிமையாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபை ஊழியர்களான எஸ்.கமலதாசன் (சாரதி), வீ.கண்ணன், கே.ரஞ்சித் குமார் ஆகியோர்கள் ரீ.சீ.லேன், ஈஸா வீதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை (18) திண்மக் கழிவகற்றல் மேற்கொண்ட வேளையில் இவை கண்டெடுக்கப்பட்டது.

இதனை திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம். முஸ்பாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதேவேளை அவ்வீதியினால் பணப்பை தொலைந்து விட்டதாக தேடிவந்த உரிமையாளரிடம் அது தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுதியதன் பின்னர் பிரதேச சபையில் வைத்து உரிய ஆவணங்களும், 40,000 ரூபாய் பணமும் ஒப்படைக்கப்பட்டது.

இதன் மூலம் சம்மாந்துறை பிரதேச சபைக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தமைக்காக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் ஆகியோரால் குறித்த ஊழியர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்ததுடன், இவ்ஊழியர்களுக்கு பாராட்டு நற்சான்றிதழ் வழங்குமாறு சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் பணிப்புரை வழங்கினார்.

# சர்வதேச செய்திகள்

## உக்ரைன் மீதான தாக்குதலுக்கு ரஷ்யா நியாயம் தேடுவதாக அமெ. குற்றச்சாட்டு



உக்ரைன் மீது ஆக்கிரமிப்பு தொடுப்பதற்கான இட்டுக்கட்டப்பட்ட காரணங்களை ரஷ்யா தயாரித்து வருவதாகவும் அந்தத் தாக்குதல் எதிர்வரும் நாட்களில் இடம்பெறலாம் என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை விரைவாக இடம்பெறக் கூடும் என்றும் ஆனால், இராஜதந்திர தீர்வுக்கான சாத்தியம் இன்னும் இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வியாழக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த ரஷ்யா பல வழிகளை பயன்படுத்தக் கூடும் என்று பைடனின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான பிரதான அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கூற்று அடிப்படை அற்றது என்று குறிப்பிட்டிருக்கும் ரஷ்யா, அமெரிக்கா பதற்றத்தை உருவாக்குகிறது என்று குற்றம்சாட்டியுள்ளது.

தனது மேற்கு அண்டை நாடான உக்ரைன் மீது ஆக்கிரமிப்புத் தொடுக்கும் திட்டம் இல்லை என்று ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது. உக்ரைன் எல்லையில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறுவதாக ரஷ்யா கூறுகின்றபோதும், அதனை மேற்கத்தேய நாடுகள் மறுத்துள்ளன.

'தாக்குதல் தொடுப்பதை நியாயப்படுத்த போலியான நடவடிக்கை ஒன்றில் அவர்கள் ஈடுபடுவது பற்றி நாம் நம்புவதற்கு காரணம் உள்ளது' என்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த பைடன் தெரிவித்தார். இதில் தனது நலனுக்காக இட்டுக்கட்டப்பட்ட தாக்குதல் ஒன்றை நடத்தி பதில் தாக்குதல் ஒன்றாக நியாயப்படுத்த ரஷ்யா முயல்வதாகவே குற்றம்சாட்டப்படுகிறது. ரஷ்யாவின் இந்த திசை திருப்பும் திட்டம் பற்றி அமெரிக்கா பல வாரங்களாகக் கூறி வருகிறது.

ரஷ்யா அவ்வாறான நடவடிக்கைக்கு தயாராக இருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் ஐ.நா பாதுகாப்பு சபையில் குறிப்பிட்டார்.

முன் திட்டமிடப்பட்ட அந்தத் தாக்குதல் என்னவென்று தெரியாத போதும் 'ரஷ்யாவுக்குள் பயங்கரவாத குண்டுத் தாக்குதல், பாரிய புதைகுழி கண்டுபிடிப்பு, பொதுமக்கள் மீது ஆளில்லா விமானத் தாக்குதல், போலி அல்லது உண்மையான இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது' உட்பட சாத்தியங்கள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான சம்பவத்திற்கு பின் ரஷ்யா ஒரு நாடகமாக உக்ரைனில் உள்ள ரஷ்யர்களை பாதுகாப்பதற்கு அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தி ரஷ்ய ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் உக்ரைனை இலக்கு வைக்கக் கூடும் என்று பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அமெரிக்கா எந்த ஆதாரத்தையும் வெளியிடவில்லை. எனினும் சிலர் நான் கூறுவது பற்றி கேள்வி எழுப்பலாம். 'ஆனால், ஒன்றை தெளிவாகக் கூறிக் கொள்கிறேன், நான் இங்கு போரை ஆரம்பிக்க வரவில்லை. அதனை தடுக்கவே வந்தேன்' என்று பாதுகாப்பு சபையில் பிளிங்கன் குறிப்பிட்டார். ஏனைய மேற்குலகத் தலைவர்களும் இந்தக் கூற்றை பிரதிபலிக்கும் வகையில் கருத்து வெளியிட்டனர். 'முன் திட்டமிடப்பட்ட ஆயுதத் தாக்குதல் ஒன்று பற்றி' நேட்டோ செயலாளர் நாயகம் ஜேன்ஸ் ஸ்டொல்ட்பேர்க் எச்சரித்ததோடு, பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் லிஸ் ட்ரஸ் மற்றும் பிரதமர் பொரிஸ் ஜோன்சனும், முன் திட்டமிடப்பட்ட தாக்குதுல் ஒன்று பற்றி குறிப்பிட்டார். உக்ரைன் படை மற்றும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் இடையே கடந்த வியாழக்கிழமை உக்ரைன் நாட்டின் கிழக்கில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதை அடுத்தே பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக நீடிக்கும் போர் நிறுத்தத்தை மீறும் இவ்வாறான துப்பாக்கிச் சண்டைகள் அசாதாரணமானது அல்ல. ஆனால் இந்த வன்முறை தொடர்பில் இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டியுள்ளன.

ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் ஸ்டனிட்சியா லுஹன்ஸ்கா நகரில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் சிறுவர்களின் இசை அறையின் சுவர்கள் இடிந்து மூன்று பெரியவர்கள் காயமடைந்ததாகவும் சிறுவர்கள் பாதிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் பல பகுதிகளில் உக்ரைன் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தியதாக ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## பாக். சிறுபான்மையினரை காக்க ஐ.நாவுக்குக் கடிதம்




தொடர்ச்சியான அட்டூழியங்கள் மற்றும் கொடூர குற்றங்களுக்கு முகம்கொடுக்கும் பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக உடன் தலையிடும்படி ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரசுக்கு இந்திய உலக மன்றத்தின் தலைவர் புனீத் சிங் சௌதொக் கடிதம் எழுதியுள்ளார்.

"பாகிஸ்தானில் வாழ்கின்ற சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக நீங்கள் உடன் தலையிட வேண்டும் எனக் கோரி இந்தக் கடிதத்தை நான் எழுதுகிறேன்.

அவர்கள் அங்கு தொடர்ச்சியான அட்டூழியம் மற்றும் கொடூர குற்றச் செயல்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

சிறுபான்மையினர் குறிப்பாக இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்ட ஹிந்து மற்றும் சீக்கியர்கள் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல் சம்பவம் அதிகரிப்பு



அண்மைய தாக்குதல்களில் பாகிஸ்தானில் பல படை வீர்கள் கொல்லப்பட்டிருப்பது அண்டை நாடான ஆப்கானை கடந்த ஆண்டு தலிபான்கள் கைப்பற்றியது தொடக்கம் பாகிஸ்தானில் பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை காட்டுவதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் பாகிஸ்தான் மெதுவாக குழப்பம் மற்றும் ஸ்திரமற்ற நிலைக்கு சரிந்து வருவதாக அமைதி ஆய்வுகளுக்கான பாகிஸ்தான் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் இஸ்லாமாபாத், லாஹோர் உட்பட பிரதான நகரங்களை இலக்குவைத்து பலவேறு பயங்கரவாத சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக கூறப்படுகிறது.

ஜனவரி 25 இல் பலுகிஸ்தான், கெச்சில் இடம்பெற்ற தாக்குதலில் 10 பாக். இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு வாரத்தில் பெப்ரவரி 2 ஆம் திகதி அதே மாகாணத்தின் நொஷ்கி மற்றும் பன்சுர் மாவட்டங்களில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியாவில் கட்டுப்பாடு தளர்வு



அவுஸ்திரேலியாவின் எல்லைகள் மீண்டும் திறக்கப்படும் வேளையில், அதன் பெரிய நகரங்களில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

சிட்னி, மெல்பர்ன் ஆகிய நகரங்களில் உள்ள இரவு விடுதிகளில் ஆடல்பாடல் நிகழ்ச்சிகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைவதால் அவுஸ்திரேலியாவில் உள்ள பெரிய நகரங்களில் பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

வரும் திங்கட்கிழமை ஈராண்டுகளுக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவின் சர்வதேச எல்லைகள் முழுமையாகத் திறக்கப்படுகின்றன.

தீவிரச் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. நேற்று முதல், சிட்னி உட்பட நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களிலும், உட்புறங்களில் கூடுவோர் எண்ணிக்கைக்குக் கட்டுப்பாடு இல்லை.

அபாயம் அதிகமுள்ள இடங்களில் மட்டும் கியு.ஆர் குறியீடு கொண்டு பதிவு செய்யவேண்டும்.

## டிரம்பின் புதிய சமூக ஊடகம்: 500 பேர் பயன்படுத்தி சோதிப்பு




அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் புதிய சமூக ஊடகத்தைச் சுமார் 500 பேர் பயன்படுத்திப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு இருவர் அது குறித்துத் தகவல் அளித்தனர். 'ட்ரூத் சோசியல்' எனும் அந்தத் தளத்தின் ஆரம்பப் பதிப்பு சோதனைக்கு வெளியாகியுள்ளது.

ட்விட்டரில் டிரம்ப்புக்கு 88 மில்லியன் ரசிகர்கள் இருந்தனர். சுமார் ஓராண்டுக்கு முன் பேஸ்புக், ட்விட்டர், யுடியுப் ஆகிய தளங்கள் டிரம்ப்பின் கணக்குக்குத் தடை விதித்தன.

அதையடுத்து, டிரம்ப்பின் சொந்த நிறுவனமான டிரம்ப் மீடியா அன்ட் டெக்னோலஜி குழுமம் புதிய சமூக ஊடகச் செயலிக்கான வடிவமைப்பை ஆரம்பித்தது.

மக்கள் தொடர்பில் இருக்கக்கூடிய, சுதந்திரமான அனுபவத்தை புதிய செயலி கொடுக்கும் என்று அதன் தலைமை நிர்வாகி கூறியுள்ளார்.

ஆனால் அதன் கருத்துச் சுதந்திரக் கொள்கைகள் ஆப்பிள், கூகுள் நிறுவனங்களின் செயலிகள் வரையறுத்திருக்கும் விதிமுறைகளுடன் ஒத்துப்போகுமா என்று தெரியவில்லை என்கின்றனர் தொழில்நுட்ப நிபுணர்கள்.

## சவூதி பெண்களுக்கு ரயில் ஓட்டுநர் பணி



பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரித்து வரும் சவூதி அரேபியா, அண்மையில் ரயில் ஓட்டுநர் வேலைக்கு 30 பெண்களைப் பணியமர்த்துவது குறித்த வேலை விளம்பரம் ஒன்றை வெளியிட்டது. அந்த வேலைக்கு சுமார் 28,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதுகுறித்து, ரயில் சேவை நிறுவனமான 'ரென்ப்', இணையவழி மதிப்பீடுகளைத் தொடர்ந்து, விண்ணப்பதாரர்களைப் பாதியாகக் குறைத்துள்ளதாக குறிப்பிட்டது.

தேர்வு செய்யப்படும் பெண்கள் மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் புல்லட் ரயில்களை இயக்குவார்கள் என்றும் அது குறிப்பிட்டது. மருத்துவ ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்ற பணிகளுக்கு மட்டுமே சவூதி பெண்கள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். கடந்த 2018ஆம் ஆண்டு வரை, அங்கு பெண்கள் வாகனம் ஓட்டுவதற்குகூட அனுமதி இருக்கவில்லை. அங்கு பெண்களின் பங்களிப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளது.

## உலகின் மிகப் பெரிய நீல வைரக்கல் ஏலம்



உலகின் மிகப் பெரிய நீல வைரக் கல்லை ஏலத்தில் விடவிருப்பதாக சோதபிஸ் நிறுவனம் கூறியுள்ளது.

15.1 கேரட் எடை கொண்ட டி பீர்ஸ் கல்லினன் வகை நீல வைரக்கல் 48 மில்லியன் டொலருக்கு மேல் விலை போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வைரம் 2011ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 15 கேரட்டுக்கும் அதிகமான எடை கொண்ட நீல வைரக்கல் முதல்முறையாக ஏலத்தில் இடம்பெறுவதாகக் கூறப்பட்டது. ஹொங்கொங்கில் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் வைரக்கல் விற்கப்படும். இம்மாதத் தொடக்கத்தில் 555.55 கேரட் கறுப்பு வைரக்கல் ஏலத்தில் விற்கப்பட்டது. அதுவே ஏலத்தில் விற்பனையான மிகப் பெரிய வைரக்கல் என்று கருதப்படுகிறது.

## ஜப்பான் எல்லை கட்டுப்பாடு: அடுத்த மாதம் தளர்த்த முடிவு



ஜப்பான், அடுத்த மாதம் முதல் அதன் கொவிட்19 எல்லைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவுள்ளது.

புதிய நடைமுறையின்கீழ், ஜப்பானுக்குச் செல்வோருக்கான தனிமைப்படுத்திக் கொள்ளும் காலம் ஒரு வாரத்திலிருந்து 3 நாளாகக் குறைக்கப்படும்.

அன்றாடம் அந்நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 3,000 இலிருந்து 5,000 ஆக உயர்த்தப்படும்.

ஜப்பானின் எல்லைகளைத் திறக்கும்படி வர்த்தகத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர். கடந்த மாத ஆரம்பத்தில், நுழைவு அனுமதியை வைத்திருந்த சுமார் 400,000 வெளிநாட்டினர் ஜப்பானுக்குச் செல்லக் காத்திருந்தனர்.

ஜப்பானில் நடப்பிலுள்ள கடுமையான எல்லைக் கட்டுப்பாடுகள் மூலம் அந்நாட்டு மக்கள் பிரதமர் புமியோ கிஷிடாவுக்கு ஆதரவளிப்பதால், அவர் எச்சரிக்கையுடன் இருப்பதாக கருதப்படுகிறது.

ஜி7 நாடுகளின் மத்தியில், ஜப்பானின் எல்லைக் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையானவை என்று அவர் முன்பு கூறியிருந்தார்.

ஆனால் அந்நாட்டில் ஒமிக்ரோன் திரிபு தொடர்ந்து அதிவேகமாகப் பரவி வருவதால், ஜப்பானிய எல்லைகளை மூடுவது குறித்துப் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## ஈரான் அணு ஒப்பந்தத்தை காப்பதற்கு கடும் முயற்சி



ஈரானின் அணுவாயுத ஒப்பந்தத்தைக் காப்பாற்றக் கணிசமான மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. வியென்னாவில் அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

ஈரான் அந்த விவகாரத்தில் கடப்பாடு காட்டினால் இருதரப்புக்கும் இடையே இணக்கம் காணும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஈரானின் அணுவாயுத ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிலையிலும் பரஸ்பர நடவடிக்கைகளை எடுக்க, உடன்படிக்கை கைகொடுக்கும் என்று பேராளர்கள் கூறுகின்றனர். அதன் மூலம் அமெரிக்காவும் ஈரானும் முழுமையாக அதை நடைமுறைப்படுத்த முடியும்.

ஈரான், தனது அணுவாயுதத் திட்டங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தால், அதற்குப் பதிலாக அதன் மீதான தடைகள் தளர்த்தப்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அந்த உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து ஈரான் பல தடைகளை மீறியுள்ளது.

# நகர்வலம்



# தீ அனர்த்தத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் சிதைவுகள் கட்டம் கட்டமாக அப்புறப்படுத்தப்படும்

### - நீதி அமைச்சர் அலி சப்ரி நேரில் சென்று ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை கடற்பரப்பில் அனர்த்தத்திற்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து வெளியில் வீசப்பட்ட பொருட்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் அந்தக் கப்பல் அப் பிரதேசத்திலிருந்து கட்டம் கட்டமாக அப்புறப்படுத்தப்படுமென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் பெற்றுக் கொள்ள வேண்டிய முழுமையான நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கப்பல் தீ அனர்த்தம் இடம்பெற்றுள்ள பகுதிக்கு நேற்றைய தினம் சென்று நேரடி கண்காணிப்பு ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் அதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த கண்காணிப்பு விஜயத்தில் அமைச்சருடன் துறைமுக கப்பல் துறை அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான கஞ்சன விஜேசேக்கர, மொஹான் சில்வா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.





அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்:

மேற்படி கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தையடுத்து மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் சிறந்த முகாமைத்துவத்துடனும் பொறுப்புடனும் அரசாங்கம் மேற்கொண்டதாகவும் அதற்கான நஷ்ட ஈடாக ஒரு பில்லியன் ரூபா நிதி ரூபா இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மீதமான நட்ட ஈட்டை பெற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கப்பலில் தீ அனர்த்தம் ஏற்பட்ட போது எந்த வித பாரிய பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் எரிபொருள் கசிவு ஏற்படாத வகையிலும் அதேவேளை, சுற்றாடல் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையிலும் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து கப்பலிலிருந்து வெளியில் வீசப்பட்ட பொருட்களை அகற்றும் பணிகள் 90 வீதம் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கப்பலை தீப்பற்றிய இடத்திலிருந்து அகற்றுவதற்கு உரிய முறைமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அந்த இடத்திற்குச் சென்று நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவுஸ்திரேலிய சட்ட நிறுவனம் ஒன்றுடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளதாகவும் கப்பல் தீப்பற்றிய தருணம் முதல் தற்போது வரை அனைத்து நடவடிக்கைகளையும் அமைச்சு, திணைக்களம் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் உள்ளடங்கிய குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊழலில் ஈடுபட்ட கணிசமானவர்கள் ஐ.ம.சக்தியின் உயர் பீடங்களில்

### - ஜே.வி.பி லால் காந்த

**எம்.ஏ.அமீனுல்லா**

கடந்த அரசாங்கத்தின் போது களவு, மோசடி உள்ளிட்ட ஊழல்களில் ஈடுபட்ட கணிசமானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் உயர் பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) அரசியல் பீட உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டால், கட்சியின் உயர் பீடத்தில் ஒரு சிலரே இருப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய லால் காந்த,..

ஐக்கிய மக்கள் சக்தி மேடையில் யார் இருக்கிறார்கள் என்பதை மக்கள் கண் திறந்து பார்க்க வேண்டும். ஊழல், மோசடி இல்லாத ஆட்சியை அமைப்பதற்கு அதன் தலைமை முதலில் கட்சியை தூய்மைப்படுத்த வேண்டும். பொதுச் சொத்தை கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள், மாவட்டத் தலைவர்கள் கணிசமானவர்கள் அந்தக் குழுவில் உள்ளனர். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்படாதவர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

எண்ணெய் நெருக்கடி என்பது தற்போதைய நெருக்கடியின் ஆழத்தைக் காட்டுகின்றது.மின்சாரம், எரிவாயு,சீமெந்து என பிரச்சினை தொடர்கிறது.

கடந்த 78க்கு பிறகு வந்த ஆட்சியாளர்கள் நடத்திய கொள்ளையடிக்கும் வேலைத்திட்டத்தின் விளைவாக உருவான நிலை இது.



தற்பொழுது ஒரு தேசிய சக்தியாக, ஏராளமான மக்கள் ஒன்று கூடும் ஒரு மேடையை நாங்கள் அமைத்துள்ளோம்.

விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட வேலைத்திட்டம் கொண்ட ஒரே அரசியல் இயக்கம் நாங்கள் தான்.

**அனைவருக்கும் குடிநீர்;**

# 2025 ஆண்டளவில் இப்பிரச்சினையை முற்றாக தீர்ப்பதற்கான திட்டம்

### இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த

2025 ஆம் ஆண்டளவில் இந்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 98 சதவீத மானோருக்கு குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,..

நாட்டில் பாரிய அளவு குடிநீர் பிரச்சினை உள்ளதாக ஜனாதிபதி அறிந்துள்ளார். அதன்படி ஆராய்ந்து பார்த்தால் நாட்டில் மொத்த ஜனத்தொகையில் 53.7% மானோருக்கே தற்போது குடிநீர் வசதி உள்ளது. அதனையும் வழங்குவதில் பெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.அதனால் 2025 ஆண்டளவில் இப்பிரச்சினையை முற்றாக தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றை தயாரிக்கும் படி ஜனாதிபதி எம்மை பணித்தார். அது உண்மையில் சவாலானது. இதற்காக நாம் சிறந்த ஒரு திட்டத்தை தயாரித்துள்ளோம் நாம் தற்போது 2025 ஆம் ஆண்டளவில் 98% மானோருக்கு குடிநீரைப் பெற்றுக் கொடுக்க ஆயத்தமாகி வருகின்றோம். இதில் குறுகியகால, மத்தியகால, நீண்ட காலம் என மூன்றாகப் பிரித்து திட்டங்களை தீட்டி உள்ளோம். விரைவான திட்டமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை தெரிவுசெய்து நல்ல குடிநீர் வழங்க திட்டமிட்டுள்ளோம். அதற்காக புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய நெனோ குடிநீர் சுத்திகரிப்பு உபகரணத்தை பயன்படுத்த உள்ளோம். மத்திய கால தீர்வாக water board மூலம் நிலையான நீர் வழங்கல் மேற்கொள்ளப்படும் வரை நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு அமைய சுத்திகரிக்கப்பட்ட SLS722 தரத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட குடிநீரை அனைவருக்கும் வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.





கிராமத்துக்கான ஒரு இலட்சம் செயற்றிட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் மேற் கொள்ளப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ், மிகிந்தல கனதரா கட்டுக்கெலியாவ கிராமத்தின் கைப்பிட்டியாவ பகுதிக்கான மையவாடிக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட போது,.. (படம்: திறப்பனை தினகரன் நிருபர்)

**அனுராதபுர பொலிஸ் பிரிவில்**

# ஜனவரியில் விபத்துகளால் இருபது பேர் மரணம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அனுராதபுரம் கோட்ட மட்ட மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பிரிவில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற 14 வாகன விபத்துக்களில் 16 பேர் மரணமடைந்துள்ளனர். அத்தோடு இம்மாதம் 15 ஆம் திகதி வரை நான்கு விபத்துக்களில் நான்கு பேருமாக இந்த வருடத்தில் இதுவரை 18 வாகன விபத்துக்களில் 20 பேர் மரணமடைந்துள்ளனர் என அனுராதபுரம் கோட்டத்திற்கு பொறுப்பான பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

கடந்த மாதத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காலதிவுல்வெவ பொலிஸ் நிலைய பொலிஸ் பிரிவில் இடம் பெற்ற 2 விபத்துக்களில் 4 பேர் மரணமடைந்துள்ளனர்.அத்தோடு நொச்சியாகம,கெகிராவ,மிகிந்தல, திறப்பனை, மரதன்கடவல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இரண்டு பேர் வீதம் பத்து பேர் மரணமடைந்துள்ளதுடன் தலாவ,உரிகஸ்வெவ ஆகிய பொலிஸ் பிரிவுகளில் ஒவ்வொரு விபத்துக்களில் ஒவ்வொருவரும் மரணமடைந்துள்ளனர் எனவும் அனுராதபுரம் கோட்ட மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.மொகம்மட் நியாஸ் மேலும் தெரிவித்தார்.



மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா(மதனி) எழுதிய "கல்வி சமூகப் பணிகளும் பயணங்களும்"எனும் நூலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமரின் கொள்ளுப்பிட்டி இல்லத்தில் வைத்து நூலாசிரியர் வழங்கி வைப்பதையும் அருகில் ஊடகவியலாளர் ருசைக் பாரூகும் உடன் காணப்படுகின்றார்.

**வட மத்திய மாகாணத்தில்**

# தடைப்பட்ட சேவைகள் மீண்டும் வழமைக்கு

**திறப்பனை தினகரன் நிருபர்**

கொவிட் தொற்று காரணமாக வட மத்திய மாகாண மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த சேவைகள் பல தடைப்பட்டதன் பின்னர், மீண்டும் இச் சேவைகளை மக்களுக்கு தடையின்றி வழங்க அரச சேவையாளர்களைக் கொண்டு புதிய வேலை திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் தெரிவித்துள்ளார். இதன் கீழ், அடுத்து வரும் காலங்களில் தடைப்பட்டிருந்த சேவைகள் பலவற்றை மக்கள் வசம் மீண்டும் நகர்த்திச் செல்வதற்கான வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.மாகாண அரச சேவையாளர்களுடனான சந்திப்பொன்றின் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பிராந்திய விடயங்கள் தொடர்பாக இலங்கை- அவுஸ்திரேலியா ஆராய்வு

**ஸாதிக் ஷிஹான்**

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்திரேலிய பாதுகாப்பு திணைக்களத்தின் உலக விவகாரப் பிரிவின் உதவி செயலாளர் டொம் மெனடு பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள பாதுகாப்பு அமைச்சு தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தலைமையிலான அவுஸ்திரேலிய தூதுக் குழுவினரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றார்.



இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பின் நினைவாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினருக்கு பாதுகாப்புச் செயலாளர் நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

**நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தால்**

# தரம் ஐந்து சித்தியடைந்த மாணவர்களுக்கு கௌரவம்

**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்துள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் நாளை 20 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள அமீர் ஆலிம் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்வி நிலைய ஸ்தாபகரும் ஆயுற்கால தலைவருமான நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தலைமையில் நடைபெரும் இவ்விழாவில் இலங்கையின் முன்னாள் ஜோர்தான் நாட்டுக்கான தூதுவர் ஏ.எல்.எம் லாபிர் விஷேட அதிதியாக கலந்து கொள்வார்.

களுத்துரை மாவட்டத்தில் உள்ள 25 முஸ்லிம் பாடசாலைகளையும் காலி மாவட்டத்திலுள்ள பலபிட்டிய, கரந்தெனிய தொகுதியிலுள்ள 3 பாடசாலைகளையும் சேர்ந்த 110 மாணவர்கள் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மேற்படி கல்வி நிலையம் 2013 ஆம் ஆண்டு முதல் கௌரவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்களின் இருப்பை பாதுகாக்க சங்கிலிப் போராட்டம் ஆரம்பம்

<u>ஹற்றன் சுழற்சி நிருபர்</u>

மலையக மக்களின் இருப்பை பாதுகாக்கவும், தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் சங்கிலிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளேன். அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்வேன். வண்ணங்களோ, சின்னங்களோ இதில் இல்லை. எனவே, எண்ணங்களுக்காக அனைவரும் பேராதரவு வழங்க வேண்டும் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

வடிவேல் சுரேஷ் எம்.பி. தலைமையில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர், தோட்டப்பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு தொழில்சார் விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்ஓர் அங்கமாக நுவரெலியா நானுஓயா தோட்டப்பகுதிகளில் நேற்று (18.02.2022) தெளிவூட்டல் நடவடிக்கை



இடம்பெற்றது. இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“மலையக மக்களுக்கு எதிராக அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அடக்குமுறைகள் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்கு தெளிவுப்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றோம்.

எமது மக்களின் இருப்பை பாதுகாத்துக்கொள்வதற்கும், தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். எமக்கு வண்ணங்களோ, சின்னங்களோ முக்கியமில்லை. மக்களின் எண்ணங்கள்தான் முக்கியம். எனவே, கட்சிபேதமின்றி அனைவரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் . எமது மக்களுக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அனைத்து வழிகளிலும் போராடுவேன்.

அதேவேளை, மலையகத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் கோதுமை மா நிவாரணம் வழங்கும் நடைமுறை ஏற்புடையதல்ல. அனைத்து தரப்பினருக்கும் அது வழங்கப்பட வேண்டும். ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கிவிட்டு, மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வெறும் 40 ரூபா வழங்கப்படுகின்றது. இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் விபத்து ; ஒருவர் படுகாயம்

<u>சாவகச்சேரி விசேட நிருபர்</u>

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் படைமுகாம் முன்பாக ஏ 9 வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். ஏ 9 வீதி ஊடாக சென்ற மோட்டார் சைக்கிள் குறுக்கு வீதி ஒன்றினுள் திருப்ப முற்பட்ட வேளையில் பின்புறமாக வந்த வாகனம் மோதி இவ்விபத்து இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 231, Nortolk Street, APT6, Cambridge MA 02139 United States of America இல் முன்னர் வசித்தவரும், தற்பொழுது 309 Village orchard Road, Cary NorthCarolina 27519 United States of America இல் வசிப்பவரும் Kudarallage Janaka Jigeeshu Perera ஆகிய நான், ஐக்கிய அமெரிக்காவின் பிரசித்த நொத்தாரிசு Michelle Ray என்பவரினால் 05.08.2000ஆம் ஆண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கொழும்பு-8, காஸல் வீதி, 34 1/1இல் வசிக்கும் Ramya Gitanjali Gunasekara மற்றும் Asoka George Arthur De Silva Gunasekara ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணி தத்துவமானது, இன்று முதல் செயல் வலுப் பெறும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

Kudarallage Janaka Jigeeshu Perera

### நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

இல. 417/8, கலாநிதிமுல்லை, முல்லேரியவை புதிய நகரம், ஏ என்னும் முகவரியில் வசிக்கும் **மடுஷிகா துலானி லியனகே** ஆகிய நான் கொழும்பு மாவட்டத்தில் சிங்கள மொழியில் கடமையாற்றும் பிரசித்த நொத்தாரிசாக உட்பிரவேசிப்பதற்காக நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதன் பொருட்டு 107ஆம் அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின், 7வது பிரிவின் பிரகாரம் இத்தினம் தொடக்கம் ஒரு மாதத்தின் பின்னர் பதிவாளர் நாயகத்திடம் கோருவதாக அனைவருக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நொத்தாரிசு எழுதுவினைஞர்**

**எம்.டி.லியனகே**
**இல. 417/8, கலாநிதிமுல்லை,**
**முல்லேரியவை புதிய நகரம்.**
**2021.12.19**

### 1964 இலக்கம் 28 காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7(I) பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது தொடர்பு இலக்கம்: BD/KK/LND1/6/2-1**
**காணி அமைச்சின் தொடரிலக்கம்: 4/3/9/2014/IR/57**

இங்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 2022.01.31ம் திகதிய இல. 2265/18 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் (111) பிரிவைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலக பிரிவு | : கந்தகெட்டிய |
| கிராமம் | : 32டி வாசனாகம |
| அமைவிடம் | : பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வியலுவ கோரளையின் சிறு பிரிவின் 32டி வாசனாகம பிரிவின் கோடுன்ன கிராமம் |
| காணியின் பெயர் | : தல்பிட்டிகல வத்த, கொடமடஹேன்யாய அராவே ஹேன, வெந்தேசிஹேன, கல்கெட்டியஹேன, திம்புலலங்கஹேன, போகஹலங்ககும்புர, முலத்தஅராவேஹேன, மெதஅராவேகும்புர |
| அடிப்படை வரைபட இலக்கம் | : அ.க.பி. 338 |
| துண்டு இலக்கம் | : 258 முதல் 443 வரை (170 துண்டுகள்) |

**ஆர்.எம்.ஏ.ஐ. ரத்நாயக்க,**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**காணி அங்கீகரித்தல் அதிகாரி,**
**கந்தகெட்டிய.**

**காணிப் பிரிவு**
**பிரதேச செயலகம்,**
**கந்தகெட்டிய.**

### கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### க.வி.சு.ம.ப.இல் வத்துபிட்டிவல மருத்துவப் பூங்காவில் பாதுகாப்பு வேலியை (Link Mesh) நிர்மாணித்தல்

1. க.வி.சு.ம.ப. இல் வத்துபிட்டிவல மருத்துவப் பூங்காவில் பாதுகாப்பு வேலியை (Link Mesh) நிர்மாணிப்பதற்காக தகைமையும், தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. 2022 பெப்ரவரி 05ம் திகதிய தினமின, டெயிலிநியூஸ், தினகரன் பத்திரிகையில் பிரசுரமான மேற்படி கேள்வியுடன் சம்பந்தப்பட்ட கேள்வியின் திறக்கப்படும் திகதி 2022.03.02 பி.ப. 2.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்,**
**யக்கல.**
2022 பெப்ரவரி 19

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
**நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

### திருத்தம்

### பெறுகை அறிவித்தல்

### குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு இடையே இயங்கும் குமுதினி பயணிகள் மரப்படகினை பழுதுபார்த்தல் / புதுப்பித்தல்

2022.01.31 ஆம் திகதியன்று வெளியான மேற்குறிப்பிடப்பட்ட பெறுகை அறிவிப்புக்கான பத்திரிகை விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. மூடப்பட்ட விலைமனு சமர்ப்பிப்புக்கான காலம் 2022.03.03 ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
2. இப்பெறுகைக்கான முன்மனுக் கூட்டம் 2022.02.24 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு இலக்கம் 761, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வட மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம் பெறும்.

மாகாண பணிப்பாளர் - வட மாகாணம்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
இல-761, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2222590 / 021-2222580

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் இலக்கம் 4-3/10/2019-MV/463-A**
**எனது குறிப்பு இல - DIVH/LAND/LA/ACQUI/3-2/337**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2022.02.22ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு 2022.02.02 மற்றும் G 2265/32 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| மாவட்டம் | குருநாகல் | | |
|---|---|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 337 மொரகொளளகம | | |
| ஆரம்ப வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல. | முழு காணியின் விஸ்தீரணம் |
| 1887இல் பிற்சேர்க்கை இல. 5 தாள் இலக்கம் 6 | மபேகமுவ | 303,304,307-314,316, 317,321,323,330-332, 338,342-345,348-350, 353-357,359-371, 374-376,379,381-383,386,387,389-392, 394,395,398,399 வரை | ஹெக்டயார் 2.2028 |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**பொல்பித்திகம.**
திகதி: 2022.02.17

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் இலக்கம் 4-3/10/2019-MV/463-G**
**எனது குறிப்பு இல - DIVH/LAND/LA/ACQUI/3-2/343-10**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2022.02.24ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.02.22 மற்றும் 2265/32 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| மாவட்டம் | குருநாகல் | | |
|---|---|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 341 கலஹிட்டியாகம | | |
| ஆரம்ப வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல. | முழு காணியின் விஸ்தீரணம் |
| 2997இல் பிற்சேர்க்கை இல. 3 தாள் இலக்கம் 3 | கலஹிட்டியாகம | 190,193,194,195, 196 வரை | ஹெக்டயார் 3.2313 |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**பொல்பித்திகம.**
திகதி: 2022.02.17

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் இலக்கம் 4-3/10/2019-MV/463-G**
**எனது குறிப்பு இல - DIVH/LAND/LA/ACQUI/3-2/343-10**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2022.02.24ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.02.02 மற்றும் G 2265/32 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| மாவட்டம் | குருநாகல் | | |
|---|---|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 342 ஹெரத்கம | | |
| ஆரம்ப வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல. | முழு காணியின் விஸ்தீரணம் |
| 3002இல் பிற்சேர்க்கை இல. 2, தாள் இலக்கம் 2 | ஹெரத்கம | 327 | ஹெக்டயார் 1.1368 |
| 3003இல் பிற்சேர்க்கை இல. 2, தாள் இலக்கம் 2 | மஹ கிரிஉல | 21-28 வரை | ஹெக்டயார் 0.5625 |
| 7இல் பிற்சேர்க்கை இல. 5 தாள் இலக்கம் 7 | கஹல்ல பல்லேகெலே | 290,293,294,296 வரை | ஹெக்டயார் 1.5980 |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**பொல்பித்திகம.**
திகதி: 2022.02.17

### தேசிய வைத்தியசாலை - கண்டி

### சுத்திகரிப்புப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கான விலைமனுக்கோரல்

கண்டி தேசிய வைத்தியசாலைக்கு பின்வரும் சுத்திகரிப்புப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்க்கு தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து, பிராந்தியப் பெறுகைக்குழுத் தலைவரினால் விலைமனுக்கோரப்படுகின்றது, விலைமனுத்திறத்தல், 2022.03.11 அன்று மு.ப. 10.30 இற்கு மேற்கொள்ளப்படுமென்பதால், அன்றையதினம், மு.ப. 10.30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விலைமனுக்கள் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள், ‘தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, தேசிய வைத்தியசாலை - கண்டி’ என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பலாமென்பதுடன், நேரடியாக ஒப்படைப்பதானால், பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் முத்திரையிட்டு வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுத்திறக்கும் திகதி மற்றும் ‘சுத்திகரிப்புப் பதார்த்தங்களிற்கான விலைமனு’ எனக் குறிப்பிடல் வேண்டும்.

| | உருப்படி | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Carbolic Soap | 100g | 60000 |
| 2 | Dish Wash Powder | 650g | 3000 |
| 3 | Detergent Liquid | 4 Ltr Can | 1300 |
| 4 | Bar Soap | 650g | 7200 |

1. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 2,000.00 மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், கண்டி தேசிய வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் விண்ணப்பக் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2022.02.18 முதல் 2022.03.10 வரை வார வேலை நாட்களில், மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரையான காலப்பகுதியில் கண்டி தேசிய வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் இதற்கான மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக, பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரக் கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர், கண்டி தேசிய வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விலைமனு மாதிரிப்படிவங்களை இலவசமாகப பரிசீலனை செய்து கொள்ளலாம்.
3. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா 100,000.00 பெறுமதியான மற்றும் விலைமனுத்திறக்கப்படும் தினத்திலிருந்து 180 நாட்கள் செல்லுபடியாகும் வண்ணம் பணிப்பாளர், தேசிய வைத்தியசாலை, கண்டி என்ற பெயரில் பெற்றுக்கொள்ளும் விலைமனுப்பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. விலைமனு மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புகளிற்கமைவாக விலைமனுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) முறையின் பிரகாரம் விலைமனுக்கோரப்படும்.
6. கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம், இறுதித்தீர்மானமென்பதனை விலைமனுதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

# இலங்கையுடனான 4 ஆவது 20க்கு20 போட்டி அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுகளால் வெற்றி



## தொடரில் 4-0 என முன்னிலையில்

இலங்கை அணிக்கு எதிரான நான்காவது 20க்கு20 ஆட்டத்தில அவுஸ்திரேலிய அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றியீட்டி தொடரை 4-0 என முன்னிலையில் உள்ளது. 140 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என பதிலெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.அவ்வணி சார்பாக கிளேன் மெக்ஸ்வெல் 39 பந்து களில் 48 ஓட்டங்களையும் ஜோஸ் இங்லிஸ் 40 ஓட்டங்களையும் அகர் 26 ஓட்டங்களையும் ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றனர்.இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் லகிரு குமார இரண்டு விக்கெட்டையும் மஹீஷ் தீக்ஷன ,துஷ்மந்த சமீர தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.




மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று வெள்ளியன்று அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது 20க்கு 20 போட்டியில் இலங்கை 8 விக்கெட் இழப்புக்கு 139 ஓட்டங்களை பெற்றது. தொடக்க ஆட்டக்காரர் பெதும் நிசாங்க 46 ஓட்டங்கள் பெற்று அணியை ஒரு நிலைக்கு கொண்டு வந்தார்.ஆனால் பின்வந்தவர்களால் ஓட்டங்கள் பெற தடுமாறினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 4-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள ஆஸி அணியின் பந்துவீச்சு ஜாம்பவான்கள் ஜோஷ் ஹேசில்வுட், பாட் கம்மின்ஸ் மற்றும் மிட்செல் ஸ்டார்க் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டது.இது ஜே ரிச்சர்ட்சன், டேனியல் சாம்ஸ் மற்றும் கேன் ரிச்சர்ட்சன் ஆகியோர் வேகப்பந்து வீச்சில் கலக்கினர். அவர்கள் ஆக்ரோஷமான தொடக்கத்தை மேற்கொண்டனர், ஆனால் சுழற்பந்து வீச்சாளர்களான அஷ்டன் அகர் மற்றும் அடம் ஜம்பா ஆகியோரின் இறுக்கமான பந்துவீச்சு ஓட்ட விகிதத்தை மழுங்கடித்தது, தாமதமாக சரிந்தது 21 பந்துகளில் 12 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகள் வீழ்ந்து இலங்கை அணியால் ஓட்டம் குவிக்க முடியாமல் போனது.





ரிச்சர்ட்சன் ,அகார் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இழப்பதற்கு எதுவும் இல்லாமல், நிஸ்ஸங்க மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆக்ரோஷமாகத் தொடங்கி, முதல் நான்கு ஓவர்களில் 35 ஓட்டங்கள் எடுத்தனர். அவர்கள் ஒன்று மற்றும் இருவர் நன்றாக ஆடியதால் விக்கெட்டுக்கு இடையில் மேம்பட்ட ஓட்டத்துடன் இது தொடரின் சிறந்த தொடக்கமாகும்.

ஆனால் சீரற்ற குணதிலக நீடிக்கவில்லை, அகாரின் பந்து வீச்சில் 17 ஓட்டங்கள் பெற்ற போது ஆரோன் பின்ச்சிடம் பிடியானார்.

21 பந்துகளில் 27 ஓட்டங்ககள் எடுத்திருந்த போது, இரண்டு பெரிய சிக்ஸர்களை அடித்த கு சல் மெண்டிஸுடன் இணைந்து, க்ளென் மேக்ஸ்வெல்லின் சிறப்பான ரன்அவுட்டுக்கு பலியாகுவதற்கு முன், குசல் மெண்டிஸுடன் இணைந்து ஒரு விக்கெட் இழப்பிற்கு 73 ஓட்டங்கள் எடுக்க நிசாங்க உதவினார். ஆனால் சுழற்பந்து வீச்சாளர்கள் அடுத்த ஐந்து ஓவர்களில் வெறும் 31 ஓட்டங்களுக்கு இலங்கை விரர்களை கட்டுப்படுத்தியதால் ஓட்டங்கள் வறண்டு போகத் தொடங்கின. சரித் அசலங்கா (22) ஜே ரிச்சர்ட்சனிடம் வீழ்ந்தார், அவரைத் தொடர்ந்து மூன்று ஓட்டங்களுக்குப் பிறகு நிஸ்ஸங்க, சம்பாவின் பந்தில் மேத்யூ வேட் ஸ்டம்பிங் செய்து சரிவைத் தூண்டினார்.

தினேஷ் சந்திமால் (2), தலைவர் தசுன் ஷனக (1), துஷ்மந்த சமீர (1) மற்றும் மஹீஷ் தீக்ஷனா (3) ஆகியோர் விரைவாக பின்தொடர்ந்தனர், அவர்கள் கேன் ரிச்சர்ட்சன் வீசிய கடைசி ஓவரில் இருந்து 17 ஓட்டங்களை எடுத்தனர்.இரு அணிகளும் மோதும் இறுதியும் 5 ஆவது ஆட்டம் இதே மைதானத்தில் இடம்பெறும் .

விளையாட்டுத் திறன்களை இனங்காணல் நிகழ்ச்சித்திட்டம்

# அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் ஆரம்பம்

பாலமுனை தினகரன் நிருபர்

விளையாட்டுத் திறன்களைக் கொண்ட விளையாட்டு வீர வீராங்கனைகள் கிராமிய மட்டத்தில் தோற்றம் பெறுவார்களாயினும், அவர்களின் திறன்களை இனங் காணுவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான முறைமையொன்று நடைமுறைப் படுத்தப்படாமையினால் விளையாட்டு வீர வீராங்கனைகள் போட்டித் தன்மையுடன் கூடிய விளையாட்டுக்களில் முன்னோக்கிச் செல்ல முடியாத நிலை அவதானிக்கப்பட்டுள்ளது .

அதன்பிரகாரம் நாடு முழுவதும் பரந்து வதியும் இயற்றிறன்களால் நிறைந்த பிள்ளைகளை இனங் கண்டு , விஞ்ஞான முறைமைகளுக்கு ஏற்ப தேசிய மற்றும் சர்வதேச வெற்றிகளை இலக்காகக் கொண்டு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் திறன்களை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டத்தினை நாடு முழுவதும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விஷேட தேவையுடைய விளையாட்டு வீர வீராங்கனைகள் மீதும் விஷேட கவனத்தினைச் செலுத் துதப்படவுள்ளது. மூன்று கட்டங்களாக இத்தெரிவு நடைபெறும் இதன் முதலாவது கட்டமாக கிராம பிரிவு மட்டம் இரண்டாம் கட்டமாக பிரதேச செயலகப் பிரிவு மட்டமும் மூன்றாவது மாவட்ட மட்டமாக தெரிவு நடைபெறும்.

மேற்படி ஒவ்வொரு கட்டத்தின் கீழ் 16 வயது தொடக்கம் 24 வயது வரையிலான விளையாட்டு வீர வீராங்கனைகள் தெரிவு நடைபெறும்.

இதனடிப்படையில் அட்டாளைச் சேனை பிரதேச செயலக பிரிவுகளுக்கான வீர வீராங்கனைகளை தெரிவுப் பரிசோதனைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

இன்று சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு அட்டாளைச்சேனை பொது விளையாடு மைதானத்திலும் 2022.02.20 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்குபாலமுனை பொது விளையாட்டு மைதானத்திலும் 2022.02.26 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஒலுவில் அல்ஹம்றா பாடசாலை மைதானத்திலும் 2022.02.27 ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு தீக்கவாப்பி பாடசாலை மைதானத்திலும் முதல் கட்டத் தெரிவில் உரிய பிரதேசத்தில் விளையாட்டில் ஈடுபட்டுள்ள 16 வயது தொடக்கம் 24 வயது வரையிலான விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்ற முடியும்.


இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு உங்களது பிரிவுகளில் கடமையாற்றும் கிராம சேவை உத்தியோகாத்தர்கள் அல்லது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத் மற்றும் விளையாடு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வதை தொடர்பு கொள்ளவும்.

# இரண்டாவது இன்னிங்ஸிலும் தென்னாபிரிக்கா தடுமாற்றம்



## 353 ஓட்டங்கள் முன்னிலையில் நியூஸிலாந்து அணி

நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.




இதன்படி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் தென்னாபிரிக்கா அணி, நேற்றைய இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 34 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஆட்டநேர முடிவில், வெண்டர் டுஸன் 9 ஓட்டங்களுடனும், டெம்பா பவுமா 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பீடுகையில், தென்னாபிரிக்கா அணி 353 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி, 95 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சுபைர் ஹம்சா 25 ஓட்டங்களையும் வெர்ரின்னே 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மெட் ஹென்ரி 7 விக்கெட்டுகளையும் டிம் சவுத்தீ, கெய்ல் ஜேமிஸன், நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 482 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹென்ரி நிக்கோல்ஸ் 105 ஓட்டங்களையும் டொம் பிளென்டல் 96 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஒலிவியர் 3 விக்கெட்டுகளையும் ரபாடா, மார்கோ ஜென்சன் மற்றும் மார்க்ரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் க்ளென்டன் ஸ்டூர்மேன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, 387 ஓட்டங்கள் பின்னிலையின் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 34 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி இன்று தொடரவுள்ளது.

# நற்பிட்டிமுனையில் விசேட வர்ண இரவு

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)



நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகத்தின் வருடாந்த வீரர்களை கௌரவிக்கும் விசேட வர்ண நேர இரவு கடந்த 13ஆந் திகதி சேனைகுடியிருப்பு தமிழ்வாணண் மண்டபத்தில் இலங்கை கிரிக்கெட் சபை நடுவரும் கழகத் தலைவருமான ஆசிரியர் றிலாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மயோன் முஸ்தபா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக ஓய்வு நிலைஅதிபர் கையூம் , அதிபர் நஜிப் அவர்களுடன் இணைந்து இன்னும் பல முக்கிய விசேட அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்

மேலும் 2021ம் ஆண்டின் சிறந்த வீரராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை றிலாஸ் பெற்றார்.

சிறந்த பந்து வீச்சாளராக அஸ்ஜான்,சிறந்த நன்னடத்தை வீரராக பிர்னாஸ்,சிறந்த விக்கெட் காப்பாளராக சப்னாஸ், வளர்ந்து வரும் வீரராக .ஹஸ்ஸான்,சிறந்த முகாமையாளராக நசீம்,சிறந்த வேகப்பந்து வீச்சாளராக பஸ்லூன்,சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரராக யஷார்,சிறந்த போராட்ட வீரராக ஜெனிஸ்,சிறந்த இடைநிலை துடுப்பாட்ட வீரராக இஸ்மத் ,மூத்த வீரராக அயாஸ்,சிறந்த செயலாளருக்கான விருதை நிஸ்பான் மற்றும் சிறந்த Stylish துடுப்பாட்ட வீரராக .அல்தாப் ஆகியோர் அதிதிகளால் விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் இன்னும் பல விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டது. பிரதம அதிதி உரையாற்றும் போது இந்த கழகதின் வளர்சிக்கு தன்னால் முடியுமான உதவிகளை தொடர்ச்சியாக செய்வதாக உரையாற்றினார்.

அத்தோடு 2021 ம் க.பொ.த. சாதாரன பரீட்சையில் 8AB பெறுபேற்றைப் பெற்ற எமது கழக வீரர் றிப்னாஸ் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட தோடு கௌரவ அதிதியும் கழகத் தலைவரால் பொன்னாடை போற்றி விசேட விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# லக்கி உதைபந்தாட்ட அணி சம்பியன்

அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த லக்கி சம்பியன் கிண்ணம் 2022 உதை பந்தாட்டப் போட்டி நேற்று மாலை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



இப் போட்டியில் அட்டாளைச்சேனை லக்கி அணியும் சம்மாந்துறை எவ கிறீன் அணியும் பங்கு பற்றியது. இதில் லக்கி அணி 3 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

லக்கி அணியின் சார்பில் சஞ்ஜீவ் ஒரு கோலினையும், டிலுக்ஸன் இரண்டு கோலினையும் அடித்தனர்.

இப்போட்டியில் லக்கி அணியினர் மிகச் சிறப்பாக விளையாடியதுடன் சிறந்த பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டது இப்போட்டியில் லக்கி அணியினர் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் மூத்த உதைபந்தாட்ட வீரர் ஹம்சா சனூஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில், சமாதான நீதவான்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி பஹத் ஏ மஜீட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், மைதான பொறுப்பாளர் றஹ்மான் மற்றும் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் வீரர்கள் அறிமுகத்திலும் பங்கேற்றனர்.

இப்போட்டியில் லக்கி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியதுடன் இரண்டாமிடத்தை எவ கிறீன் அணி பெற்றுக்கொண்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 19ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.